விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
**Valampurii**

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 26 திங்கட்கிழமை (09.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 172

# போர்க்குற்ற விசாரணைக்குழுவிற்கு நியூசிலாந்து பெண் நீதிபதி தலைமை

## ஐ.நா செயலாளரால் நியமிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐ.நா விசாரணைக் குழுவின் தலைவராக நியூசிலாந்தைச் சேர்ந்த முன்னாள் பெண் நீதிபதி டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையார் நியமிக்கப்பட்டுள்ளார்.

கம்போடியாவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள்

20ஆம் பக்கம் பார்க்க....

## ஜோர்தான் இளவரசர் ஹுசைனின் நியமனத்துக்கு இலங்கை கவலை



(கொழும்பு)

ஐ.நாவின் தற்போதைய மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை விடவும், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஜோர்தான் இளவரசர் சையிட் அல் ஹுசைன் கடும போக்கைக் கடைப்பிடிப்பவராக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளராக தற்போது பணியாற்றி வரும் நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முடிவடையவுள்ள நிலையில், புதிய மனிதவுரிமைகள் ஆணையாளராக இளவரசர் சையிட் அல் ஹுசைனை நியமிக்கவுள்ளதாக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இலங்கை அரசாங்கத்து

19ஆம் பக்கம் பார்க்க....

## வடக்குக் கிழக்கு பகுதிகளில் ஊட்டச்சத்துக் குறைபாடு

### ஆய்வு மூலம் கண்டறிவு

(கொழும்பு)

இலங்கையில் சிறார்களில் மூவரில் ஒருவரும் வளர்ந்தவர்களில் நால்வரில் ஒருவரும் இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்தச் சோகை நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐ.நாவுடன் சேர்ந்து சுகாதார அமைச்சு நடத்தியிருந்த ஆய்வொன்றில் அண்மையில் தெரியவந்திருந்தது.

இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்தச் சோகையை ஒரு பொதுச் சுகாதாரப் பிரச்சினை என்று கூறியிருந்த சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, இரும்புச் சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதன் மூலம் நாட்டின் தேசிய உற்பத்தித் திறனை 20 வீதத்தால் அதிகரித்துக் கொள்ளமுடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

இதனிடையே, மலையகத் தோட்டப்புறங்களிலும் வடக்குக் கிழக்கில் முன்னாள் போர் வலயங்களிலுமே கூடுதலான சிறார்களும் கர்ப்பிணிப் பெண்களும் ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் இரத்தச் சோகையினால் பாதிக்கப்

19ஆம் பக்கம் பார்க்க....

# இராணுவ வன்முறைகள் இலங்கையில் அதிகரிப்பு

### அல் ஜசீரா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்களும், வன்முறைகளும் அதிகரித்துச் செல்வதாக அல் ஜசீரா இணையத்தளம் தெரிவித்துள்ளது.

2013ஆம் ஆண்டு படைத்தரப்பினர் இழைத்த குற்றச்செயல்கள் மற்றும் வன்முறைகள், இவ்வாண்டு ஐந்து சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அல் ஜசீரா இணையத்தளத்தில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், படைத்தரப்பினருக்கு போதியளவு உளவளத்துணை வழங்கப்படாமையே இதற்கான முக்கிய காரணம் என உளவியலாளர்கள் தெரிவிப்பதாக இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

2014ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத

19ஆம் பக்கம் பார்க்க....

## தொண்டு நிறுவனங்கள் கண்காணிப்பு

(கொழும்பு)

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குறித்து கண்காணிக்குமாறு தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாட்டு பங்குதாரர்களுடன் இணை

20ஆம் பக்கம் பார்க்க....

**IELTS, O/L எதுவுமே தேவையில்லை, நேர்முகத் தேர்வுகளும் இல்லை, எம்மிடம் மட்டுமே தனித்துவமாக கிடைக்கின்ற 4 புதிய வாய்ப்புக்கள்.**

✦ UK இல் 2 வருட படிக்கும் விசா, 2 வருட உழைக்கும் விசா, 1 மாதத்தில் நல்லது, கெட்டது தெரிய வந்துவிடும்.
✦ வெறும் 8 இலட்சம் போதும் ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்கலாம், கை நிறைய உழைக்கலாம். 3 பேருக்கு மட்டுமே இவ்வாய்ப்பு.
✦ செங்கென் நாடுகளான சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, ஜேர்மனி, இத்தாலி 30 நாட்களில் பறந்தோடலாம்.
✦ கனடாபோக 3 மாதம், படிமுறைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு ஒப்பந்தம்.



**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(C-7602)

## தமிழக மீனவர்கள் தொடர் கைது ஜெயலலிதா மோடிக்கு கடிதம்

(சென்னை)

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது தாக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைத்து நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏற்கெனவே இலங்கை கடற்படையால்கைது செய்யப்பட்ட 33 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்ததற்கு நன்றி. இலங்கை கடற்படையின் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக பாக்கு நீரிணையில் மீன் பிடிப்பதற்காக மீனவர்கள் உரிமை மற்றும் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 83 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்



துள்ளது. நெடுங்காலமாக தொடர்ந்து வரும் தமிழக மீனவர்களின் இந்த பிரச்சினையை

19ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகபலியை நிறுத்தக் கோரி வழக்குத் தாக்கல் செய்ய முடிவு

யாழ். கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள. மிருகபலியை நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்து மிருகபலியை நடத்த முற்படுமாயின் ஜீவ காருண்ய அடிப்படையில் ஆலய நிர்வாகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனத் தலைவர் சிவத்திரு இ.கலியுகவரதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சமயங்கள் அனைத்தும் அன்பையே போதிக்கின்றன. அதேபோன்று சைவ சமயமும் அன்பையே போதிக்கின்றது. இறை சந்நிதானத்தில் அனைத்து உயிர்களும் சமமானவை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே இறைவன் அனைத்து உயிர்களையும் தனது வாகனமாக்கியிருக்கின்றார்.

இதனை வெளிப்படுத்தவதற்காகவே ஆலயங்களில நடைபெறுகின்ற திருவிழாக்களில் சுவாமியை காவுவதற்கு ஒவ்வொரு வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அன்பு நெறியாக அமைந்த சைவ சமயத்திலுள்ள நாங்கள் ஆடுகளையும் சேவல்களையும் ஆலயத்திற்கு கொண்டு சென்று மிருகபலி செய்வதானது மனிதாபிமானமற்ற செயலாகும். மிருகங்களுக்கு குறி சுடுதலையே பாவமாகக் கருதுகின்ற தற்போதைய காலத்தில் அதுவும் மக்கள் வழிபாடு செய்கின்ற ஆலயத்தில் மிருகங்களைப் பலியிடுவதானது ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஆலயங்களில் மிருகபலி இடம்பெறும் போது அதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற சிறுவர்கள் எதிர்காலத்தில் வன்முறை மிக்கவர்களாக மாறுகின்றனர். பெண்களும் மனதளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இம்முறையும் கவுணாவத்தை ஆலயத்தில் வேள்வி என்ற பெயரில் மிருகபலி நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக நாம் அறிகின்றோம் எனவே குறித்த ஆலயம் அதனை நிறுத்தி யாழ். குடாநாட்டிலுள்ள ஏனைய ஆலயங்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ளுமாறு நாம் விநயமாக கேட்டுக் கொள்கின்றோம்.(எ-6)




சமூக ஆர்வலருக்கு கிடைத்த வெற்றிக்கு எமது அகமகிழ்ந்த வாழ்த்துக்கள்

(வைத்திய கலாநிதி வை.தியாகராசா MJF.JP)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 B 1 க்கான மகாநாடு கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற போது உப ஆளுநருக்கான தேர்தலில் அமோக வெற்றியீட்டி சாதனை படைத்த

வைத்திய கலாநிதி (வை.தியாகராசா) அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

ச.யோசராசா(ஆனந்தி)
குடும்பம்.

செட்டித்தெரு
நல்லூர்.

C-7596


# பருத்தித்துறை கடலில் புத்தளம் மீனவர்கள்

(பருத்தித்துறை)

புத்தளம், குரக்கன்கேன கல்பிட்டிய பகுதியிலிருந்து மீன்பிடிப்பதற்காக கப்பலில் சென்ற 5 பேரில் ஒருவர் உயிரிழந்த நிலையில் நேற்று அதிகாலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் பயணித்த வர்ணகுலசூரிய ஸ்ரான்லி யஸ்ரின்கொஸ்தா (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி பகுதியிலிருந்து 5 பேருடன் மே மாதம் 28ஆம் திகதி மீன்பிடிக் கப்பல் புறப்பட்டிருந்தது. இந்நிலையில், கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, மேற்படி நபர் நேற்று அதிகாலை திடீரென உயிரிழந்துள்ளார்.

இதனால், தங்களது கப்பலை பருத்தித்துறை துறைமுகத்தில் கரைசேர்த்ததாக ஏனைய 4 பேரும் தெரிவித்துள்ளதாகவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)


## தவறிவிட்டது

சுன்னாகத்தைச் சேர்ந்த நவரட்ணம் விஜயகுமார் என்பவருடைய 811271870V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

c-6702

தொடர்புகளுக்கு - 077-258 6237


## விற்பனைக்கு

மா அரைக்கும் அல்லர், தூள் அரைக்கும் அல்லர், ஈர மா அரிசி அல்லர், றொப்லான்ட் இஞ்சின் போன்றவை விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0779198559,0212061695
புதுக்குடியிருப்பு

(சி-7609)


## கண்ணீர் காணிக்கை



இராசையா இரவீந்திரன்

அன்பும் அமைதியும் அனைவருடனும் அகமகிழ்ந்து பேசி பழகிடும் சுபாவமும் அப்பழுக்கற்ற மனித நேயமும் அழகே உருவான ஆசை முகமும் தங்களின் அர்த்தபுஷ்டியுடைய அர்ப்பணிப்புகளும் எங்கள் இதயங்களில் நிறைந்து நிற்க, தங்களின் பிரிவுத் துயரால் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயரை பிரார்த்திக்கின்றோம்.

அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் கோவில் தர்மகர்த்தா

(6706)

# மரண அறிவித்தல்



## பரமலிங்கம் திருஞானலிங்கம்

யாழ்.புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.15 புதுக்காடு இராமநாதபுரம் கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட பரமலிங்கம் திருஞானலிங்கம் அவர்கள் 06.06.2014 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற பரமலிங்கம் திருமேனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமநாதர் ருக்குமணி தம்பதியரின் அன்பு மருமகனும், தெய்வகலாவின் அன்புக் கணவரும், சுகந்தன் (பிரான்ஸ்), துசந்தன் (இத்தாலி), காலஞ்சென்ற குட்டி, தினேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தவரதியின் அன்பு மாமனாரும், திருமகள், திருவேரகன், திருவருள், திருமலர், திருமாமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைசிங்கம், மங்களேஸ்வரி, முத்துநாயகம், இருதயராசா, ரவீந்திரன், மாலா, நாதகிருஸ்ணன், காலஞ்சென்ற புவீந்திரன், சிவலிங்கம், மல்லிகா தேவி, ஸ்ரீகாந்தன், லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசரத்தினம், கமலேஸ்வரி, சுபாசினி, இராசேந்திரன், கலா, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2014) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல.15 புதுக்காடு
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

தகவல் :
குடும்பத்தினர்.

(சி-7601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## கந்தையா சாமி

(கே.எஸ். அம்பாள் மினிபஸ் உரிமையாளர்)

பிறப்பு 1934.01.11

இறப்பு 2009.06.09

குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
நற்பண்புகளுடன்– நல்
வாழ்வுக்கு வழிகாட்டி
எமக்காகவே வாழ்ந்த
எம் அன்புத் தெய்வமே
உங்கள் நினைவுடன்
என்றும் வாழ்கின்றோம்.



1/5, பலாலி வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால்
துயருறும்
(சாமி குடும்பம்)

(6703)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளொன்றுக்கு 2000இற்கு மேற்பட்ட அழைப்புகளுக்கு பதிலளிக்கும் ஜனசக்தி



ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் அழைப்பு நிலையத்தில் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நாளொன்றுக்கு சராசரியாக 2 ஆயிரம் இற்கும் மேற்பட்ட அழைப்புகளுக்குப் பதிலளிக்கப்படுகிறது.

"எமது அழைப்பு நிலையம், வாடிக்கையாளர்களுக்கு விரைவானதும், செயற்திறன் மிக்கதுமான சேவையை வழங்கும் வகையில் முற்றுமுழுதாகக் கணினி மயப் படுத்தப்பட்டுள்ளது" என கடந்த 20 ஆண்டுகளாக ஜனசக்தியுடன் இணைந்துள்ள ஃபுல்ஒப்ஷன்பிரிவின் சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் எஸ்.தனஞ்சயன் தெரிவித்தார்.

நாளொன்றுக்கு 250 கோரிக்கைகள தெரியப்படுத்தப்படுகிறது. மேலும் இதனை மும்மொழிகளிலும் திறமையான நன்கு பயிற்சி பெற்ற வாடிக்கையாளர் பராமரிப்பு பிரதிநிதிகளால் பெறுவதற்கு உறுதுணையான இந்த சிஸ்டத்தின் செயற்திறனுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். எமது அனைத்து பணியாளர்களும், வாடிக்கையாளர பராமரிப்பு மற்றும் அழைப்பு நிலைய செயற்பாடுகளில் விசேட பயிற்சிகளை பெற்றுள்ளனர்.

ஜனசக்தி காப்புறுதி நிறுவனமானது, பிரதிநிதிகள் மூலம் ஜனசக்தி மற்றும் ஜனசக்தி அல்லாத வாடிக்கையாளர்களுக்கு சேவைகள், வீதி வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய தகவல் சேவைகளை வழங்குவதோடு அதன் 24 மணி நேர அழைப்பு நிலையத்திற்கு அப்பால் தன் சேவையை விஸ்தரித்துள்ளது.

"தற்போது வாடிக்கையாளர் விபத்துக்கள் தொடர்பில், சேவை பிரதிநிதிகளுக்கு புரட்சிகரமான ஜனசக்தி ஃபுல் ஒப்ஷன் லொகேட் டர் எனும் வலைத்தளத்தை பயன்படுத்தி அறியப்படுத்த முடியும். இதற்கு மேலதிகமாக, எமது சேவை பிரதிநிதி, வாடிக்கையாளருக்கு எவ்வித தொந்தரவையும் ஏற்படுத்தாது விபத்து இடம்பெற்ற துல்லியமான இடத்தை Google Maps I பயன் படுத்தி அறிந்து கொள்வார்" என தனஞ்செயன் தெரிவித்தார்.

ஜனசக்தி ஃபுல் ஒப்ஷன் நிலையம் அண்மையில் தனது 10 ஆண்டுகாலச் சேவையை கொண்டா டியதுடன், ஆண்டின் 365 நாட்களும் திறந்திருக்கும் 24 மணிநேர அழைப்பு நிலையத்தை ஆரம்பித்த காப்புறுதி துறையின் முதலாவது நிறுவனம் இதுவாகும்.

ஜனசக்தி ஃபுல் ஒப்ஷன் நிலையம்இ கடந்த 2004 ஆம் ஆண்டு 6 களப்பணி அதிகாரிகள் 6 வாடிக்கையாளர் தொடர்பு பிரதி நிதிகள் மற்றும் முகாமையாளர் ஒருவருடன மிக எளிமையாக தொடங்கப்பட்ட இந்த அழைப்பு நிலையத்தின் செயற்பாடுகள் இன்று சுமார் 330 பணியாளர்களினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

# கனவுகளை நனவாக்க கைகொடுக்கும் இலங்கை வங்கி



உங்கள் நிதி நிலைமை மோசமாக இருக்கிறது என்ற காரணத்தினால உங்கள் ஆசைக்கனவுகளை நிறைவேற்ற நீங்கள் அவதியுற வேண்டியதில்லை. உங்களுக்கு கைகொடுக்க இருக்கவே இருக்கிறது இலங்கை வங்கி. இப்பொழுது இலங்கை வங்கியின் தனிப்பட்ட கடன் திட்டத்தை பயன்படுத்தி உங்கள் அவசர தேவையை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

உங்கள் கனவு திருமணமாக இருக்கலாம், தொலைக்காட்சி, வீடியோ போன்ற பொழுதுபோக்கு சாதனமாக இருக்கலாம். உங்கள் வீட்டை அலங்கரிக்கும் தளபாடங்களாக இருக்கலாம். அல்லது உங்கள் கனவு காராக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் இலங்கை வங்கியின் தனிப்பட்ட கடன் திட்டம் உங்கள் கனவை நிறைவேற்றுவதற்கு நிதி வழங்கக் காத்திருக்கிறது. நீங்கள் யாத்திரை செல்வதற்கும் இத்திட்டத்தின் கீழ் விசேட கொடுப்பனவுத் திட்டங்கள் உண்டு.

BOC தனிப்பட்ட கடன்திட்டத்தின்கீழ் உங்கள்வீட்டை புதுப்பித்துக்கட்டவோ அல்லது ஒரு எதிர்கால முதலீடாக ஒரு காணியை கொள்வனவு செய்யவோ முடியும்.

18 வயதிற்கும் 55 வயதிற்கும் இடைப்பட்ட இலங்கை பிரஜை ஒருவர அரசாங்க நிறுவனத்தில் அல்லது தனியார் நிறுவனத்தில் நிரந்தர வேலையில் 30,000 ரூபாவுக்கு குறையாத சம்பளத்தை பெறுபவராக அல்லது ஒபபந்த அடிப்படையில் பணியாற்றி 50,000 ரூபாவுக்கு குறையாத சம்பளத்தை பெறுபவராக இருந்தால் அத்தகையோருக்கு இலங்கை வங்கி இந்த வாய்ப்பை வழங்குகிறது. மிகவும் நியாயமானதொரு சேவைக் கட்டணத்தில் குறைந்த வட்டி வீதத்தில் ஆகக்கூடியது 5 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தக் கூடியதாக இக்கடன் வழங்கப்படுகிறது.

உங்கள் வாழ்க்கை முறையைப் பொறுத்து ஒரு நெகிழ்ச்சியான மீள் செலுத்தும் வசதியையும் வங்கி கடைப்பிடிக்க தயாராக இருக்கிறது. சந்தையில் மிகக் குறைந்த சேவைக் கட்டணத்துடன் உங்கள் சம்ப ளத்தைப் பொறுத்து ஆகக் கூடுதல் கடன் தொகையும்யை தீர்மா னிக்கலாம். சந்தையில் மிகவும் வசதியான வாடிக்கையாளர் சேவையுடள், நாட்டிலுள்ள எந்தவொரு BOC. கிளையிலுமிருந்து தகவல்களை உடனுக்குடன பெற்றுக் கொள்ள முடியும்.

# DFCC வங்கியுடன் கூட்டிணைந்துள்ள AIA




DFCC வங்கி மற்றும DFCC வர்தன வங்கியுடன AIA இன்சுரன்ஸ் அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டது. இக் கூட்டிணைப்புச் சேவையினை தெரிவு செய்யப்பட்ட வங்கிக் கிளைகளில் பெற முடியும். (AIA) இன்சுவரன்ஸ் உடனான இப்புதிய கூட்டிணைப்பின் மூலம் இரண்டு வங்கிகளினதும் வாடிக்கையாளர்கள் தமக்கு பொருத்தமான ஆயுள் காப்புறுதி தீர்வுகளை பெற்றுக் கொள்வார்கள்.




# சாலைகளில் மாயமான இந்திய வாகனங்கள்!

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய சாலைகளில் கோலோச்சி வந்த இந்திய தயாரிப்பு 4 மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் தற்போது மாயமாகத் துவங்கியுள்ளது. அம்பாசிடர் கடந்த 1980-ம் ஆண்டுகளில் ஆண்டிற்கு 24 ஆயிரம் கார்களை விற்று முன்னணியில் இருந்தது. பின்னர் வந்த பன்னாட்டு கார்களின் வருகையால் இதன் உற்பத்தி 2001-ம் ஆண்டில் ஆண்டிற்கு வெறும் 6 ஆயிரமாக குறைந்து கடந்த ஆண்டு வெறும் 2 ஆயிரத்து 200 கார்களை மட்டுமே உற்பத்தி செய்தது. இதையடுத்து இந்தாண்டு மே மாதத்துடன் மேற்கண்ட நிறுவனம் தன்னுடைய உற்பத்தி தொழிற்சாலையை மூடியது.

மாருதி 800: கடந்த 1983 ஆம் ஆண்டு உருவான இந்தவகை கார்கள் அமோக வரவேற்பு பெற்றது.இந்தாண்டு ஜனவரி முதல் மேற்கண்ட கார்களின் உற்பத்தி முழுவதுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,263.46 | 6,279.14 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,454.61 | 3,479.17 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 3,936.227

உயர்வடைந்த பங்குகள்(ரூ.): பிசி பார்மா(1.50), சிலோன் லெதர்(0.90), லங்கா சென்சரி(0.30), சிலோன் லெதர்(0.40), றம்பொட போல்ஸ்(19.00)

சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.): எஸ்.எம்.பி.லீசிங்(0.40), சனச டெவலப் பாங்(74.30), களனி கேபிள்(80.10), ஹேமாஸ் பவர்(17.30), லாவ்ப் காஸ்(1.80)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# CIMA மாணவர்களுக்கு BBA பட்டம் பெற வாய்ப்பு

CIMA தகைமையை பெற்ற மாணவர்களுக்கு தற்போது BBA Special (Hons) பட்டத்தை பெற்றுக கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப படுகிறது.

நிதியியல் மற்றும் கணக்கீடு ஆகிய துறைகளில் 18 மாதகாலம் இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தில் இந்த பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும்.

இந்த கற்கைநெறியை பின் தொடர விரும்பும் மாணவர்கள் யூன் மாதத்துக்கான உள்ளெடுப்புக்காக தம்மை பதிவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

CIMA தகைமையை பெற்ற மாணவர்கள் SLIIT BBA Special Honours பட்டப்படிப்பை தொடர்வதற்கான வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

இதன் மூலம் நிபுணத்துவசார் தகைமையை பெற்றுக் கொள்ள மட்டுமல்லாமல், கல்விசார் தகைமையையும் பெற்றுக் கொள்ள முடியும். நவீன வர்த்தக முகாமைத்துவ முறை என்பது, பன்முக ஒழுக்க பின பற்றலை கொண்டிருக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.

எனவே கற்கைநெறியை தொடரும் வேளையில் இறுதியாண்டில் ஒரு ஆண்டு காலம் வரை மேற்பார்வை செய்யப்படக் கூடிய ஆய்வு திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது மாணவர்களின் ஆய்வு ஆளுமைகளை விருத்தி செய்வதுடன் வர்த்தக சார் பிரச்சனைகள் தொடர்பான தீர்வுகளை பெற்றுக்கொள்ளவும் உதவியாக அமைந்திருக்கும்.

SLIIT இன் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியு மான பேராசிரியர் லலித் கமகே கருத்து தெரிவிக்கையில்,

கணக்கியல் மற்றும் நிதியியல் சார் அறிவு என்பது வர்த்தகத்தை கையாள்கை செய்வதற்கு அத்தியாவசியமானதாக அமைந்துள்ளது.

அடிப்படைத்தத்துவங்கள் தொடர்பிலான சிறந்த புரிந்துணர்வு என்பது நாளாந்தம் இடம்பெற்று வரும் மாற்றங்கள் மற்றும் அதிகரித்துச் செல்லும் சிக்கல்கள் நிறைந்த நவீன வர்த்தக செயற்பாடுகள் போன்றவற்றுக்கு உதவியாக அமைந்துள்ளன என்றார்.

இந்த விசேடமான கற்கைநெறிகள் மாணவர்களுக்கு நிதியியல் மற்றும் கணக்கியல் தொடர்பில் பரந்த அறிவை பெற்றுக் கொள்ள உதவியாக அமைந்துள்ளன.

ஆர்வமுள்ள மாணவர்கள், CIMA கற்கையை பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதுடன் க.பொ.த உயர் தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் 3 சித்திகளையும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் SLIIT வர்த்தக முகாமைத்துவ கற்கைநெறியின் முதல் தவணைக்கான பாடவிதானங்களை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

CIMA மற்றும் SLIIT ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த கற்கைநெறியின் மூலம மாணவர்களுக்கு வர்த்தக துறை சார் பட்டத்தை CIMA கற்கையை பூர்த்தி செய்த பின்னர் துரிதமாக பெற்றுக் கொள்ள வழியமைப்பதாக உள்ளது.

0777685421 அல்லது 2413900 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மாணவர்கள் மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்


(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.84 | 131.71 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 215.91 | 222.09 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 175.02 | 180.75 |
| சுவிஸ் பிராங் | 143.58 | 148.85 |
| கனேடிய டொலர் | 117.34 | 121.33 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.29 | 123.80 |
| சிங்கப்பூர் டொலர் | 102.32 | 105.67 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.29 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.20 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.47 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன! நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

(சி-7581)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 818 முறைப்பாடுகள்

பலவேறு அரச நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு எதிராக கடந்த ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான நான்கு மாத காலப்பகுதியில் இலஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவுக்கு 818 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்மி ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரச ஊழியர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளில் 283 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலஞ்ச ஊழல்விசாரணை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை 24 பிரிவுகளாக பிரித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கிடைக்கப் பெற்றுள்ள முறைபாடுகளில் அதிகமானவை கல்வித்துறையைச் சேர்ந்தவையாகும்.

கல்வித் துறையைச் சேர்ந்த 167 மோசடி முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதுமாத்திரமன்றி. உள்ளூராட்சி சபைகள். பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள். கிராம சேவகர்கள் என முக்கிய பொறுப்புக்களிலுள்ள பலருக்கெதிராக இலஞ்ச ஊழல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (2)

# இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நீதிமன்றில் சாட்சியமளிக்கத்தயார்

## நோர்வே முன்னாள் சிறப்புத்தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

**போர்க்குற்றங்கள் தொடர்பாக இலங்கைக்கு எதிராக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திலோ, எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட அனைத்துலக தீர்ப்பாயத்திலோ சாட்சியமளிக்கத்தான் தயார்என்று நோர்வேயின் முன்னாள் சிறப்புத் தூதுவரும் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

யுத்தக்குற்றச் செயல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சாட்சியமளிக்குமாறு கோரினால் எந்தவொரு சர்வதேச நீதிமன்றிலும் சாட்சியமளிக்கத் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு சிலோன் ருடே என்ற ஆங்கில வார இதழுக்கு அளித்துள்ள செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு.

2009 மே 17 ஆம் திகதி. விடுதலைப் புலிகளின் மூத்த போராளிகளான. புலித்தேவன். நடேசன் ஆகியோரிடமிருந்து தாம் சரணடைய வேண்டும் என்று நோர்வேஜியர்களுக்கும் ஏனையோருக்கும்தொலைபேசி அழைப்புகள் வந்தன.

எதையும் செய்வதற்கு மிகவும் தாமதமாகி விட்டதென்று நாம் அவர்களுக்கு கூறினோம்.

எனினும். வெள்ளைக்கொடியை உயர்த்திக் கொண்டு செல்லும்படி அவர்களுக்கு ஆலோசனை வழங்கினோம்.

மே 18 ஆம் திகதி அவர்கள் கொல்லப்பட்டு விட்டதாக எமக்குத் தகவல் கிடைத்தது.

இலங்கையில் இடம்பெற்ற போர் மிகப்பெரிய விலை கொடுத்தே வெற்றி கொள்ளப்பட்டது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

இலங்கையை விசாரிக்கும் எந்தவொரு அனைத்துலக அங்கீகாரம் பெற்ற தீர்ப்பாயத்தின் முன்பாகவும் சாட்சி சொல்ல தயாராக இருக்கிறேன்.

இலங்கையில் இடம்பெற்ற மனித வுரிமை மீறல்கள் குறித்து ஐ.நாவினாலும். அமெரிக்காவினாலும் வேறு பல இடங்களில் இருந்தும் என்னிடம் கேட்டார்கள்.

போரில் பெருமளவு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். அது மிகப் பெரிய விலை.

இராணுவ நடவடிக்கையில்லாமல். அமைதிப் பேச்சுவார்த்தைகளின் மூலம் போருக்கு தீர்வு கண்டிருக்க முடியும்.

2015 இற்கு முன் வெளிவரவுள்ள எனது நூலில் நான் பொறுப்பேற்றதில் இருந்து மேற்கொள்ளப்பட்ட அனைத்து விடயங்களையும். விடுதலைப் புலிகளினதும். மிக முக்கியமாக இலங்கை அரசியல் வாதிகளினதும் நடவடிக்கைகள் குறித்த விபரங்களையும் வெளியிடவுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 240 | 250 |
| தக்காளி | 170 | 160 | 130 | 160 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 40 | 50 |
| கோவா | 120 | 100 | 100 | 120 |
| கரட் | 140 | 140 | 140 | 160 |
| பூசணி | 70 | 80 | 70 | 80 |
| புடோல் | 70 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 80 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 120 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 140 | 160 | 100 |
| லீக்ஸ் | 100 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 90 | 90 | 120 |
| கறிமிளகாய் | 250 | 100 | 130 | 160 |
| முருங்கைக்காய் | 160 | 180 | 180 | 160 |
| போஞ்சி | 200 | 180 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | - | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 160 | 130 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 10 - 45 | 30 | 30 | 25 - 30 |
| இராசவள்ளி | 100 | 100 | - | 120 |

# அமைச்சரவை கூட்டங்களை விமல் வீரவன்ச புறக்கணிப்பு

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை. பொறியியல் சேவைகள் அமைச்சருமான விமல வீரவன்ச தொடர்ச்சியாக ஐந்து தடவைகள் அமைச்சரவை கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் தவிர்த்து வருவதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் குழுவினர் அண்மையில் 12 அம்ச முன்யோசனைகளை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

அதற்கு இதுவரையில் ஜனாதிபதியிடமிருந்து உரிய பதில் கிடைக்காமையாலேயே அமைச்சரவை கூட்டங்களை விமல் வீரவன்ச தவிர்த்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிகஹெல உறுமய ஆகிய கட்சிகள் அண்மைக் காலமாக அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வருவதுடன் அவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் பனிப்போர் ஆரம்பமானது. அது தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

கசினோ விடயம் தொடர்பிலேயே இவ்விரு கட்சிகளும் அரசாங்கத்துடன் அதிகமாக முரண்பட தொடங்கியது. இவ்வாறான நிலையில் கடந்த மாதம் நடைபெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் பேராளர் மாநாட்டில் அரசாங்கத்திடம் 12 அம்ச முன்யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த 12 அம்ச முன்யோசனைகள் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. அத்தோடு தமது குறித்த யோசனைகளுக்கு உரிய பதில் கிடைக்கவில்லையெனில் தமது அடுத்தகட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.

ஆனால் இதுவரையில் அவரது கட்சியின் குறித்த யோசனைகளுக்கு அரசாங்கம் எவ்வித பதிலையும் வழங்கவில்லை. இவ்வாறான நிலையிலேயே தேசிய சுதந்திர முன்னணிக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பனிப்போர் தொடர்வதாக அரசாங்க வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (2)

# இராசி பலன்

09.06.2014
(வைகாசி 26, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
ஏகாத்சி பிற்பகல் 2.25 மணிவரை
சித்திரை பிற்பகல் 3.07 மணிவரை
இராகுகாலம் 7.22 - 8.52 மணிவரை
சுபநேரம் 11.52 - 1.22 மணிவரை
சித்தாமிர்தம், ஏகாதசி விரதம்
வற்றாப்பளை அம்மன் பொங்கல்

வளவன்

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணவேண்டிய நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**மிதுனம்:** சகோதர ஒற்றுமையால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுப தகவல்கள் வந்து சேரும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், மாதர் நட்புண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், சயன சுகமுண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி:** அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்கள் வாங்கி மகிழ்வீர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வருவர், ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் உருவாகும், ஒரு சில கட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

**மகரம்:** தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள்.

**கும்பம்:** உறவினர்களின் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மீனம்:** நிர்வாகத்திறமைகள் வெளிப்படும் நாள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், மாற்று மருத்துவத்தால் ஆரோக்கியம் சீராகும், காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்துமாமன்றத்தினரால் நலன்புரி நிலையங்களுக்கு உலர் உணவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முயற்சியால் யாழ்.குடாநாட்டில் உள்ள 38 நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு உலக உலர் உணவு திட்டத்தின் மூலம் உலர் உணவு வழங்கும் நடவடிக்கை விரைவில் இடம்பெறவுள்ளதாக அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் க.நீலகண்டன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் சொந்த இடங்களுக்கு





செல்ல முடியாத நிலையில் தற்போது நலன்புரி நிலையங்களில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குறிப்பாக வயோதிபர்கள், சுகயீனம் அடைந்தோர் என 500 குடும்பங்களை சேர்ந்தோருக்கு இவ் உலர் உணவு வழங்கப்படவுள்ளது.

அண்மையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜ பக்ஷ அகில இலங்கை இந்து மாமன்ற பிரதிநிதிகளை சந்தித்து யாழ்.குடாநாட்டு நலன்புரி முகாம்களிலுள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்போது உலர் உணவு வழங்குவதற்கு இந்து மாமன்றத்தினால் நிதி கோரப்பட்டது.

இதற்கமையவே இவ் உலர் உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

நன்றி-ஐலன்ட்




# அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா



கம்பவாரிதி இ.ஜெயராஜ் | புலவர் மா.இராமலிங்கம் (தமிழ்நாடு) | பேராசிரியர் வி.அசோக்குமாரன் (தமிழ்நாடு) | டாக்டர் ரி.ரெங்கராஜா (தமிழ்நாடு)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா எதிர்வரும் 13,14,15 ஆம் திகதிகளில் தொடர்ந்து 3 தினங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய முதல் நாள் நிகழ்வுகள் திருநாள் மங்கலம் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வு கே.ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கல இசையுடன் மாலை அமர்வு ஆரம்பமாகும்.

மங்கல விளக்கினைதினக்குரல்நிறுவுநர் எஸ்.பி.சாமி ஏற்றிவைப்பார்.

இந்நிகழ்வின் ஆசியுரையினை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் அதிவண்.கலாநிதி எஸ்.ஜெபநேசன், ஜும்மா பள்ளிவாசல் பரிபாலனசபைத்தலைவர் மௌலவி எஸ். அப்துல் கமத் ஆகியோர் வழங்குவார்கள்.

தொடக்கவுரையினை கொழும்பு கம்பன் கழக பெருந்தலைவர் ஜெ.விஸ்வநாதன் ஆற்றுவார்.

தொடர்ந்து சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கம்பன் விழாவில் அரங்கேறிய இராம நாடகக் கீர்த்தனை இறுவெட்டு வெளியீடு இடம்பெறும்.

இவ்வெளியீட்டின் முதற்பிரதியை கரிகணன் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சி.ராஜ்குமார், சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வெ.சுதர்சன் ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

இறுவெட்டு வெளியீட்டினைத் தொடர்ந்து அமரர் வித்துவான் சி. ஆறுமுகத்தின் நினைவுக்கவிதைப் போட்டி மற்றும் அமரர் தேவன் நினைவுப் பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் வழங்கல் இடம்பெறும்.

கலை நிகழ்வாக தேசம் காத்த தேவி எனும் விருதுக்குப் பெரிதும் பொருத்தமானவள் எனும் தலைப்பில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த புலவர்மா.இராமலிங்கம்ஆணையாளராக தலைமை வகிக்கும் இலக்கிய ஆணைக்குழு இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை, மாலை இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இதற்கமைய காலை அமர்வுகள் முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு மங்கல விளக்கினை பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூ.ஸ்ரீதரசிங் ஏற்றிவைப்பார்.

தொடக்கவுரையை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்குவார்.

கலைநிகழ்வாக அணிசெய் காவியம் எனும் தொனிப்பொருளில் கவிதெரி அரங்கம் இடம்பெறும்.

இந்நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த புலவர் மா.இராமலிங்கம்நடுவராகதலைமைதாங்குவார்.

அன்றையதினம் அமர்வு பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வுகள் பி.எஸ். பாலமுருகன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து மங்கல விளக்கினை லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தைச்சேர்ந்த எஸ்.பாலசிங்கம் ஏற்றிவைப்பார்.

தொடக்கவுரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் ஆற்றுவார். கலைநிகழ்வாக பட்டி மண்டபம் இடம்பெறும்.

கம்பனின் தன்னிகரற்ற படைப்பாளுமை பெரிதும் வெளிப்படும் பாத்திரம் எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் நடுவராகத் தலைமை தாங்குவார்.

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மூன்றாம் நாள் நிகழ்வுகள் காலை, மாலை இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் காலை 9 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக கல்வித் துறை பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் மங்கல விளக்கினை பெஷன்ஹவுஸ் அதிபர் த.கந்தசாமி ஏற்றிவைப்பார்.

தொடக்கவுரையை யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயப்பிள்ளை ஆற்றுவார். கலைநிகழ்வாக கவியரங்கம் இடம்பெறும்.

கம்பன் காட்டும் எண்ணினால் கவிதை பாட எண்ணினால் எனும் தொனிப்பொருளில் சி.சிவகுமார் தலைமையில் நடைபெறும்.

தொடர்ந்து வள்ளுவர் நெறியில் கம்பநாடன் எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் உரையரங்கம் இடம்பெறும்.

மூன்றாம் நிகழ்வின் மாலை அமர்வு பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வு வி.சித்தார்த்தன், வி. பிராதித்தன் குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமாகும்.

மங்கலவிளக்கினை தேசமான்ய லயன் த.பாலசுந்தரம் ஏற்றிவைப்பார்.

தொடக்கவுரையை பாரம்பரிய கைத்தொழில்கள்மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆற்றுவார்.

நிறைவுரையை ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் வழங்குவார்.

கலைநிகழ்வாக குற்றக்கூண்டில் கும்பகர்ணன் எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் வழக்காடு மன்றம் இடம்பெறும். (2)



*சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் விஞ்ஞான விழாவினை முன்னிட்டு யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதன்போது நாடகத்தில் பங்குபற்றிய மாணவர்கள் நாடகநெறியாளருடன் நிற்பதை படத்தில் காணலாம்.*

*(படம்:-மல்லாகம் செய்தியாளர்)*

## குருபூசைவிழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை விழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.மா. அனந்தலட்சுமி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் திருஞான சம்பந்தரும் வாழ்வும் எனும் தொனிப்பொருளில் இளம் சைவப் புலவர் க.கைலைநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். அத்துடன் இளவாலை வசந்தபுரம்-பாரதி அறநெறிப்பாடசாலை, வசாவிளான்-கோசலை அறநெறிப்பாடசாலை, கோண்டாவில் கைலாச நாத வேதசிவாகம அறநெறிப்பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெறும். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

829

## தேடி வந்த சியாங்!

முன்னொரு காலத்தில் வியட்நாமில் "சேதுங்' என்பவன் இருந்தான்.

அவன் ஒரு கூலி வேலைக்காரன்.

ஒரு சிறிய கீற்றுக் கொட்டகையில் குடும்பத்துடன் வசித்தான்.

சேதுங் தினமும் வேலைக்குச் சென்று, அன்றன்று கிடைக்கும் பணத்தில்தான் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான்.

ஒருநாள் வேலை இல்லை என்றாலும் அன்று பட்டினிதான். எவ்வளவுதான் சிரமங்கள் ஏற்பட்டாலும், தன் கஷ்டங்களை வெளியே சொல்ல மாட்டான்.

ஒருநாள், அவனுக்கு வேலை எதுவும் கிடைக்காமல் வீட்டில் இருந்தான்.

அப்போது, வீட்டு வாசலில் யாரோ முனகும் சத்தம் கேட்டது.

சேதுங் ஓடிச் சென்று பார்த்தான்.

வயதான ஒருவர் மயங்கிக் கிடந்தார்.

சேதுங் அவரைத் தூக்கிக் கொண்டு குடிசைக்குள் வந்தான்.

முகத்தில் தண்ணீர் தெளித்ததும் அவர் விழித்தார்.

"நீங்கள் யார் அய்யா?" என்று சேதுங் கேட்டான்.

"என் பெயர் சியாங்.

நான் ஒரு பிச்சைக்காரன்.

மூன்று நாட்களாக எதுவுமே சாப்பிடவில்லை" என்றார் அவர்.

உடனே சமையல் அறைக்குச் சென்றான் சேதுங்.

ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் கஞ்சியுடன் திரும்பி வந்தான்.

"இதைக் குடியுங்கள் அய்யா.

உங்களுக்குத் தருவதற்கு இது மட்டும்தான் இருக்கிறது" என்றவாறு கஞ்சிப் பாத்திரத்தைப் பெரியவரின் முன்னால் வைத்தான்.



பெரியவர் கஞ்சி முழுவதையும் ஆவலுடன் குடித்தார்.

பிறகு, கண்ணீர் மல்க சேதுங்கைப் பார்த்தார்.

"இளைஞனே... எத்தனையோ பணக்காரர்களின் மாளிகைகளில் ஏறி இறங்கினேன்.

பச்சைத் தண்ணீர்கூட தரவில்லை.

ஆனால், இருந்த கொஞ்சக் கஞ்சியையும் நீ எனக்குத் தந்துவிட்டாய்.

நாளையும் உணவு கொடு.

அதற்கு அடுத்தநாள் நான் போய்விடுவேன்!" என்றார்.

அப்படி இரண்டு நாட்கள் கடந்தன.

மூன்றாவது நாள், முதியவர் புறப்பட்டார்.

போவதற்கு முன்பு சேதுங்கையும், அவன் மனைவி, மக்களையும் அருகே அழைத்தார்.

"வெகுகால தவத்தின் பயனால் எனக்கு ஒரு சக்தி கிடைத்து இருக்கிறது.

எதிர்காலத்தில் நடக்கும் விடயங்களை என்னால் முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியும்.

சில தினங்களுக்குள் இங்கே ஒரு பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்படும்.

சுயநலக்காரர்கள் இறப்பார்கள்.

ஆனால், நல்லவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அதனால், நான் உங்களுக்கு இந்த விதையைத் தருகிறேன்.

இதை நட்டு, நன்கு பராமரித்து வா!" என்றவர், ஒரு தர்ப்பூசணி விதையை சேதுங்கிடம் கொடுத்துவிட்டு, விடைபெற்றுச் சென்றார்.

சேதுங், அன்றே அந்த விதையை மண்ணில் ஊன்றினான்.

நான்கு நாட்களுக்குள் அந்த விதை முளைத்து, வளர்ந்தது. யானை அளவுக்கு பெரிய தர்ப்பூசணியும் காய்த்தது.

மறுநாளே அந்த ஊரில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

எல்லோரும் அந்த வெள்ளத்தில் மூழ்கினார்கள்.

ஆனால், சேதுங்கிற்கும் அவன் குடும்பத்திற்கும் எந்தத் தீங்கும் ஏற்படவில்லை.

அவர்கள், அந்த தர்ப்பூசணியை வெட்டி, ஒரு படகு செய்தார்கள்.

அதில் ஏறி, தண்ணீரின் மீது பயணம் செய்தார்கள்.

வெள்ளம் ஏறாத ஒரு குன்றின் உச்சியை அடைந்தார்கள்.

சேதுங் தன் குடும்பத்துடன் அங்கேயே தங்கத் தொடங்கினான்.

சில நாட்கள் கழித்து முதியவர் சியாங், மீண்டும் அங்கே வந்தார்.

அவரைப் பார்த்ததும் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தான் சேதுங்.

சேதுங் பெரியவருக்கு அருமையான விருந்துக்கு ஏற்பாடு செய்தான்.

விருந்து முடிந்ததும் குடிலுக்கு வெளியே சென்றார் சியாங். திடீரென்று அந்தச் சம்பவம் நடந்தது.

சியாங் நின்று இருந்த இடத்தில் ஒரு புனித உருவம்.

அவர்.... புத்தர்!

வணாங்கி நிற்கின்ற சேதுங்கையும் அவன் குடும்பத்தையும் ஆசிர்வதித்தபடி புத்தர் சொன்னார், "நான்தான் பிச்சைக்காரனாக வந்தேன்.

பூமியில் இப்போதும் நல்லவர்கள் இருக்கிறார்களா என்பதை அறிவதற்காக வந்தேன்.

உங்களின் நல்ல மனதைக் கண்டு மகிழ்கிறேன். உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

"இறைவா! ஊர் என்று இருந்தால் நல்லவர்களுடன் சுயநலக்காரர்களும் கலந்தே இருப்பார்கள்.

அவர்கள், தவறை உணர்ந்து மனம் மாறுவதற்கு சந்தர்ப்பம் தர வேண்டும்.

இப்போது இந்த ஊரில் எங்களைத் தவிர யாருமே இல்லை.

உலகம் எல்லோருக்குமானது. இவ்வளவு பெரிய ஊரில்... நாங்கள் மட்டும் இருப்பது உறுத்தலாக இருக்கிறது.

வெள்ளத்தில் சிக்கி இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்து, அவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தர வேண்டும்" என்றான் சேதுங்.

கருணையுடன் புன்னகைத்த புத்தர், "உன் நல்ல மனதை நினைத்து மகிழ்கிறேன். அப்படியே ஆகட்டும். நீங்கள் இந்த ஊருக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருந்து, புகழுடனும் வளமுடனும் நீண்ட காலம் வாழ்வீர்கள்" என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

புத்தரின் ஆசி பெற்ற சேதுங்கும் அவன் குடும்பமும், மக்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து நீண்டகாலம் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

06.2014 09

- 68 - ரோமப் பேரரசன் நீரோ தற்கொலை செய்து கொண்டான்.
- 1873 - இரு வாரங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட லண்டன் அலெக்சாந்திரா அரண்மனை தீயினால் அழிந்தது.
- 1903 - அநுராதபுரத்தில் இடம்பெற்ற கலவரத்தில் கத்தோலிக்க ஆலயம் ஒன்று பௌத்தர்களினால் சேதமாக்கப்பட்டு மதகுரு தாக்கப்பட்டார்.
- 1923 - பல்கேரியாவில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.
- 1928 - அவுஸ்திரேலியாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் முதற்தடவையாக சார்ல்ஸ் கிங்ஸ்போர்ட் ஸ்மித் வானூர்தியில் கடந்தார்.
- 1934 - வால்ட் டிஸ்னியின் டொனால்ட்டக் வரைகதை வெளிவந்தது.
- 1935 - வடமேற்கு சீனாவில் ஜப்பானியரின் ஆக்கிரமிப்பை சீனக் குடியரசு அங்கீகரித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் கிழக்கு கரேலியாவினுள் ஊடுருவியது.
- 1946 - பூமிபோன் ஆடுல்யாடெ தாய்லாந்தின் அரசனாக முடி சூடினார். இவரே இன்று உலகில் மிக நீண்டகால அரசர் ஆவார்.
- 1962 - தங்கனீக்கா குடியரசாகியது.

### பிறப்புகள்

- 1945 - கிரண் பேடி, இந்தியாவின் முதல் பெண்மணி, இந்திய காவல் சேவை அதிகாரி
- 1975 - ஆன்ட்ரூ சைமன்ஸ், அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்
- 1977 - பேஜா ஸ்டொயாகொவிக், செர்பிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 68 - நீரோ, ரோமப் பேரரசன் (பி. 37)
- 1870 - சார்ல்ஸ் டிக்கன்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி. 1812)
- 1946 - ஆனந்தா மஹிடோல், தாய்லாந்து மன்னர் (பி. 1925)
- 1974 - மிகுவேல் ஆஸ்டூரியாஸ், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி. 1890)
- 1989 - ஜோர்ஜ் பீடில்ல், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1903)
- 1994 - ஜான் டின்பேர்ஜென், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1903)
- 1834 - வில்லியம் கேரி, பப்திஸ்த சபையைத் தொடக்கியவர்களில் ஒருவர், பைபிளைப் பல இந்திய மொழிகளில் மொழிபெயர்த்தவர் (பி. 1761)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



மூலம், பூராடம்,
உத்தராடம் 1 ஆம் பாதம்

**எட்டாமிடத்தில் குரு வருகை!
எதிலும் கவனம்
மிகத் தேவை!**

**50/100**

**எதையும் சாமர்த்தியமாகப்பேசி சமாளிக்கும் ஆற்றலைப்பெற்ற தனுசு இராசிநேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கப்போகிறார். எட்டில் குரு வந்தால் எண்ணற்ற மாற்றம் வரும் என்பது உண்மைதான். ஆனால் எதிர்பார்த்த மாற்றங்கள் வருமா? என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தமுறை வருகின்ற குருப் பெயர்ச்சி சாதாரண குருப் பெயர்ச்சியல்ல. உச்சமாக வருகிற குருப் பெயர்ச்சி ஆகும்.

அங்ஙனம் குரு உச்சம் பெற்று உங்கள் ராசிக்கு 8-இல் சஞ்சரித்தாலும்கூட அதன் பார்வைப்பலம் உங்களுக்கு பக்கபலமாக இருக்கும். உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்குமா? என்று நினைக்க வேண்டாம். இராசி நாதன் உச்சம் பெறும் பொழுது யோசிக்காது செய்யும் காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும்.

உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ள உங்கள் பணியைத் தொடர வாய்ப்புகள் கைகூடி வரும். இருப்பினும் கேந்திராதி பத்ய தோஷம் பெற்ற கிரகமாகவும் குரு விளங்குவதால் சந்தோஷங்களை மட்டுமே சந்திக்க விரும்புபவர்கள் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

தற்சமயம் சனியின் பார்வையும் உங்கள் ராசியில் பதிகிறது. பார்க்கும் சனி உங்களுக்கு பல விதங்களிலும் நன்மையை உருவாக்கலாம். எனவே எதையும் கொஞ்சம் முன் யோசனையுடன் செய்தால் பொன்னான எதிர் காலத்தை வரவழைத்துக் கொள்ள இயலும். அதற்கு அடித்தளமாக சனிக்கிழமை தோறும் சனிபகவானையும் நீங்கள் வழிபட்டு வர வேண்டும். குறிப்பாக அருகிலிருக்கும் புராதனக் கோவில்களுக்குச் சென்று மஞ்சள் வண்ண வஸ்திரம் சாற்றி குருவையும் சனி பகவானையும் வழிபடுவது நல்லது.

**உறவிற்கு கைகொடுக்கும்
உத்தமர்கள்!**

தன்னைத்தானே உணர்ந்து கொண்டு செயற்படுபவர்கள் நீங்கள். மற்றவர்கள் உங்களைக் கட்டுப்படுத்த முடியாது. எதிலும் ஒரு ஈடுபாடு கொண்டு செயற்படுவீர்கள். மனச் சாட்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். மறைமுகப்பகை உங்களுக்கு அதிகம் உண்டு.

தேசப்பற்றும் தெய்வப்பற்று மிக்க நீங்கள் மனதில் இருக்கும் இலட்சியம் நிறைவேறும்வரை விடாது பாடுபடுவீர்கள். உங்களோடு பழகியவர்கள் கடைசிவரை உங்களை மறக்க மாட்டார்கள். 24 மணி நேரமும் எதிர்கால சிந்தனையிலேயே இருக்கும் உங்களுக்கு கோபம் அதிகமாகவே இருக்கும். இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி கூடுதல் நற்பலன்களைக் கொடுக்குமா? இல்லை குழப்பங்களைக் கொடுக்குமா? தேடும் செல்வத்தைச் சேமிக்கச் செய்யுமா? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**எட்டினில் குருதான் வந்தால்
எண்ணற்ற மாற்றம் சேரும்!
சுற்றத்தார் பகைவர் ஆவார்!
சுகமெல்லாம் குறைந்து போகும்!
கட்டாயம் குருவை நீங்கள்
கைகூப்பித் தொழுது நின்றால்
திட்டங்கள் வெற்றியாகும்!
தெய்வங்கள் துணையாய் நிற்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 8 ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது எண்ணற்ற மாற்றம் வரும் என்பது நியதி. திட்டங்கள் திசை மாறிச் செல்லலாம். திறமை மிக்கவர்கள் உங்களை விட்டு விலகலாம். சுற்றத்தார் பகை பாராட்டுவர். துணிவும் தன்னம்பிக்கையும் மட்டும் உங்கள் கைவசம் இருந்தால் கட்டாயம் வெற்றியை நீங்கள் வரவழைத்துக் கொள்ள இயலும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சிக்கென்று ஏற்பாடு செய்தவர்கள் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். வீடு மாற்றம், நாடு மாற்றம், இலாகா மாற்றம் போன்றவற்றில் ஏதேனும் ஒரு மாற்றம் வந்து சேரும்.

சொத்துக்களை ஒரு சிலர் விற்க நேரிடலாம். ஏற்றமும் இறக்கமும் வருகிற வாழ்க்கையில் இப்போது எட்டில் குரு வரும்போது விரயங்களையும் விரக்தியையும் சந்திக்கிறோமே என்று நினைக்க வேண்டாம். பொறுமையோடு செயற்படுவதே நல்லது. அடுத்து ஒன்பதாமிடத்திற்கு குரு வந்ததும் மகிழ்ச்சியும் மட்டற்ற வருமானமும் வந்து சேரும். இழப்புக்களை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும்.

**குரு பார்வை
கொடுக்கும் யோகங்கள்!**

நவக்கிரகத்தில் நல்லவன் என்றும் சுப கிரகமென்றும் பொன்னவன் என்றும் வர்ணிக்கப்படும் குரு பகவான் உங்களுக்கு இராசிநாதனாக விளங்குகிறார். அவர் அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும்கூட அவரது பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் எல்லாம் பதிவாகிறது. எனவே அந்த ஸ்தானங்கள் எல்லாம் புனிதமடைகின்றன.

## தனுசு



**இரண்டினை குருதான் பார்த்தால்
இலாபங்கள் வந்து சேரும்!
நான்கினை குருதான் பார்த்தால்
நலங்களும் சுகமும் வாய்க்கும்!
பனிரெண்டை குருதான் பார்த்தால்
பயணத்தால் பலன் கிடைக்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் இந்த நேரத்தில் கவலை உங்களை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக அகலும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். உறவினர்களுக்கு கொடுத்த பணம் எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு இப்பொழுது கணிசமான தொகை கைக்கு வந்து சேரும். குரு பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள். வீடு கட்டும் பணி பாதியில் நிற்கிறதே என்ற கவலை அகலும். விரயங்கள் சுப விரயங்களாக மாறும். தாயின் உடல்நலம் தேறும். குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். நண்பர்கள் நல்ல செய்திகளைக் கொண்டுவந்து சேர்ப்பர். அந்நிய தேச வாய்ப்பு அலை மோதும். அயன சயன ஸ்தானம் என்பதால் வாழ்க்கைத்துணை வழியே வந்த பிரச்சினைகள் நல்ல முடிபுக்கு வரும். திடீர் இடமாற்றங்கள் நன்மையைக் கொடுக்கும்.

**சஞ்சாரப் பலன்கள்**

குரு தன் சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (13.06.2014 முதல் 28.06.2014 வரை) நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரும். வீண் குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கூட்டாளிகள் கூடுதல் இலாபத்தைக் கொண்டு வந்து சேர்ப்பர். வாகன யோகம் முதல் வளர்ச்சிக்கு வித்திடும் யோகம் வரை படிப்படியாக வந்துசேரும். தாய்வழி ஆதரவு பெருகும். இடம், பூமி சேர்க்கை உண்டு. விலகிச் சென்ற உடன் பிறப்புக்கள் விரும்பி வந்து சேருவர்.

சனி சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (29.06.2014 முதல் 27.08.2014 வரை) வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகளில் இருந்த தடைகள் அகலும். கடல் தாண்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். போட்டி பந்தயங்களிலும் வெற்றி கிடைக்கும். பக்கத்துவீட்டாரின் பகை மாறும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுக்கும் முயற்சிகளுக்கு மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் வீடு தேடி வருவர். அரசுவழிச் சலுகைகள் வழக்குகளில் நல்ல முடிபுகள் ஏற்படும்.

புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும்பொழுது (28.08.2014 முதல் 02.12.2014 வரை) உங்கள் இராசிக்கு 7,10 க்கு அதிபதியானவர் புதன். அதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது களத்திர வழியில் மேன்மைகள் உண்டாகும். திருமண வாய்ப்புகள் கைகூடும். கௌரவம் அந்தஸ்து உயரும். கூட்டுத் தொழில் தனித் தொழிலாக மாற கூட்டாளிகளை விலக்கிவிட்டு தனித்து இயங்க முற்படுவர். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக்கொண்டு தொழில் தொடங்க முன்வருவர். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க முக்கிய புள்ளிகள் ஒத்துழைப்புச் செய்வர்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் குருவால் ஆதாயத்தை மட்டுமே நீங்கள் பெற வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். யோகங்கள் வந்து சேரும்.

**தனுசு இராசியில்
பிறந்த பெண்களுக்கு!**

வழிபாட்டின் மூலமே வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். அஷ்டமத்தில் குரு சஞ்சரிப்பதால் காரியங்கள் கடைசி நேரத்திலேயே கைகூடலாம். குருவின் பார்வை பலத்தால் குடும்ப முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். என்றாலும், மனநிம்மதி குறையும். வெளியூர் செல்லலாமா என்று யோசிப்பீர்கள். வீடு மாற்றங்களும் ஒரு சிலருக்கு வந்து சேரும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை மேலோங்க விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. விரயங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் பிள்ளைகள் நலன் கருதி விலையுயர்ந்த பொருட்களை வாங்கிவைக்கலாம். தெய்வ பிரார்த்தனைகளால் நன்மைகளை வரவழைத்துக்கொள்ள இயலும். எனவே, பார்க்கும் இராகுவைப் பலப்படுத்த சர்ப்ப சாந்தி செய்யுங்கள்.



குருப் பெயர்ச்சி நேர ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| | சுக்ரன் கேது | சூரியன் புதன் (வ) | |
| | குருப்பெயர்ச்சி 13-6-2014 | | வியாழன் |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | செவ்வாய் |

***சுப ஸ்ரீ ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.06.2014) மாலை 6.03 மணிக்கு புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாதத்தில் கடக இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும்.***

**குருவின் வக்ர காலம்**

- **13.06.2014 முதல் 28.06. 2014 வரை புனர்பூசம் 4 இல் நட்சத்திரக் காலில் குரு. (தனது சாரம்)**
- **29.06.2014 முதல் 27.08 2014 வரை பூசம் நட்சத்திரக்காலில் குரு. (சனி சாரம்)**
- **28.08.2014 முதல் 02. 12.2014 வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் குரு. (புதன் சாரம்)**
- **03.12.2014 முதல் 21.12.2014 வரை மகம் நட்சத்திரக் காலில் குரு அதிசாரமாக செல்கிறார்.**
- **17.12.2014 முதல் 21.12.2014 வரை கேது சாரத்தில் குரு வக்ர கதி.**
- **22.12.2014 முதல் 14.04.2015 வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் வக்ர கதியில் குரு செல்கிறார்.**
- **15.04.2015 முதல் 04.07.2015 வரை ஆயிலியம் நட்சத்திரம் புதன் சாரத்தில் நேர் கதியில் குரு செல்கிறார்.**
- **05.07.2015 அன்று குரு சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார்.**

அஷ்டமத்தில் குருவால் அனுகூலம் கிடைக்க வியாழக்கிழமை குரு வழிபாட்டையும், சனிக்கிழமை அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்வது அவசியம்.

**அக்கறை செலுத்த வேண்டிய
வக்ர காலம்!**

குருபகவான் 03.12.2014 முதல் 21.12.2014 வரை மக நட்சத்திரக்காலில் அதிசாரமாகச் செல்கின்றார். இந்தக் காலம் ஒரு பொற்காலமாகவே உங்களுக்கு அமையும். டிசம்பர் 17 முதல் சிம்மத்தில் வக்ர கதியில் இருக்கிறார். தொடர்ந்து 14.04. 2015 வரை வக்ர கதியில் சஞ்சரிக்கின்றார். இந்த வக்ர காலம் உங்களுக்கு நன்மைகளை வழங்கும் காலமாகும். தொட்டது துலங்கும். தொல்லைகள் அகலும். வெற்றிக்குரிய தகவல் வீடு வந்து சேரும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டுவந்து சேர்ப்பர். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள்தோன்றும். விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்**

நாளை மகரம்.........

## எட்டாமிடத்தில் குரு வருகை! எதிலும் கவனம் மிகத் தேவை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



65

...அப்போது நானும் பன்னிரண்டு வயதுப் பாமரன்.

ஒவ்வொரு முறையும் அவர் ஊருக்கு வரும்போது எனக்கு உற்சாகம்தான்; உற்சவம்தான். அவரது பளபளப்பான லுங்கியை எடுத்துக் கட்டிக் கொண்டும், தாமரை இலைக்குத் தண்ணீரில் சட்டை தைத்துப் போட்டது மாதிரி உடம்பில் ஒட்டாத அந்த டெரிலின் சட்டையை அணிந்து அணிந்து அழகு பார்த்துக் கொண்டும், பாடுகிறவர்களையே தொட்டுப் பார்க்கிற சந்தோஷத்தில் அந்த டிரான்ஸ்சிஸ்டரை அணைத்துக் கொண்டும், நாளை விடிவதற்குள் வெள்ளையாகிவிடுவது என்ற தீர்மானத்தோடு அவரது பாண்ட்ஸ் பவுடரை ஆற்றுத் தண்ணீரைப் போல் அள்ளி அள்ளித் தெளித்துக் கொண்டும், அடடா... நவநாகரிகத்தின் ஜன்னல்கள் அந்த நான்கைந்து நாட்களும் திறந்திருக்கும்.

ஒரே ஒரு சிகரெட்டுக்காக அவர் பத்து ரூபாய் நோட்டை மாற்றுகிற போது மூட்டைப் பூச்சிக்காக வீட்டைக் கொளுத்துவது மாதிரி நான் வியந்தும் பயந்தும் இருக்கிறேன்.

எனக்கு முதல் பேனா வாங்கித் தந்தது அவர்தான். என் பெயருக்கு முதன் முதலில் கடிதம் எழுதியதும் அவர்தான்.

எங்களூர்த் திரையரங்கத்துக்குள் என்னை முதன் முதலாய்ப் பெஞ்சு டிக்கெட்டில் அழைத்துப் போய் அன்று அந்தப் படத்தைவிட அந்த இடத்தையே அதிகம் ரசிக்க வைத்தவர் அவர்தான்.

என்னை முதன் முதலில் ஒரு முழு நாவலை வாசிக்க வைத்தவரும் அவர்தான்.

என் கண்ணில் ஆயிரம் மின்னல்களை அடிக்க வைத்ததும், ஒன்றும் விதைக்காதிருந்த என் மனதை உழுது போட்டதும், வார்த்தைகளுக்குள்ளே வாழ்க்கையைச் சிக்கவைக்க முடியும் என்ற முக்கியமான உண்மையை முளைக்க வைத்ததும், எனக்குள் என் நரம்புகளைத் திரியாக்கித் தீபமேற்றியதும் அதுதான்- அந்த நாவல்தான்! அது என் மாமாவின் துணைப்பாட நூல்.

விக்டர் ஹியுகோவின் லேமிஸரபில் என்ற பிரஞ்சு நாவலின் தமிழாக்கம் அது.

அடையாளங்கள் தெரிய ஆரம்பித்த அந்த அடி நாட்களில் என் உறவுக்காரர்கள் எல்லாம் என்மீது வெவ்வேறு விமர்சனக் கணைகளை வீச ஆரம்பித்தார்கள்.

"ராமசாமித்தேவர் மகன் நல்லாத்தான் படிக்கிறான். தாசில்தார் படிப்புப் படிக்க வைக்கலாம்னு நெனைச்சா பய பொறக்கிறுக்கு (பிறைக்கிறுக்கு) வந்து புலம்பிக்கிட்டுத் திரியரானப்பா"




கவியோகி சுத்தானந்த பாரதி மொழி பெயர்த்திருந்த 'அந்த ஏழை படும்பாடு' இந்த ஏழையைப் படுத்திய பாட்டை என் சொல்ல?

அந்த வகையில் பார்த்தால் என் இலக்கிய வேட்கைக்கு தூரத்தில் ஒரு துணைக்காரணமாய் நின்றவரும் அவர்தான்.

ஒரு பெண் பருவமடைவதற்கான அடையாளங்கள் தெரிகிற மாதிரி நான் இலக்கியம் எழுதப் போகிறவன் என்ற

என்று கிராமத்து மொழியில் என் கவிதைகளுக்காக இரங்கல் தீர்மானம் போட்டவர்கள் எத்தனையோ பேர்.

ஆனால் நான் முளைக்கத் தொடங்கிய காலத்திலிருந்து கிளைக்கத் தொடங்கிய காலம்வரை என்மீதும் என் இலக்கியத்தின்மீதும் நசிந்து போகாத நம்பிக்கை வைத்திருந்தவர் என் மாமா இருளாண்டி- மன்னிக்கவும் மோகன் மட்டும்தான்.

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது.

வைகை அணைக்கட்டின் பேருந்து நிலையத்தில் அவருடைய நண்பர் வாசுதேவனை விருதுநகருக்கு வழியனுப்புதலுக்கான காத்திருப்பில் என்னைப் 'பராசக்தி' வசனம் பேசச் சொன்னார்.

ஒரே 'தம்'மில் வசனத்தை வெளியிட்ட பிறகுதான் மூச்சை வெளியிட்டேன்.

அப்போது என் மாமா சொன்னார்: "இவனை மட்டும் மெட்ராஸில் விட்டால் ஒரு கலக்குக் கலக்குவான்."

என் மனதில் நம்பிக்கையூட்டிய முதல் வாசகம் அதுதான்.

இது இருபத்து நான்கு வருடங்களுக்கு முன்னால் பெய்த மழைதான்.

ஆனால் இப்போதும் கூட நான் நினைந்து பார்க்கும் போதெல்லாம் என்னால் நனைந்து பார்க்க முடிகிறது.

ஒரு கல்யாணத்தை முடித்து விட்டு, கோடாங்கி பட்டியிலிருந்து தேனி மார்க்கமாகக் கரட்டுப்பட்டிக்கு வந்து கொண்டிருக்கிறது எங்கள் கட்டை வண்டி.

தேனி அடைந்தவுடன் எல்லோரும் கேட்டபடி என் மாமா சர்க்கரைச் சேவு வாங்கித் தருகிறார்; நான் கேட்டபடி 'திருடாதே' பாட்டுப் புத்தகம் வாங்கித் தருகிறார்.

கட்டை வண்டியில் நடமாடும் கச்சேரி ஆரம்பமாகிறது....

-வைரமுத்து- (தொடரும்)

# தடுத்து வைக்கப்பட்ட இலங்கையர்கள் விடுப்பு

சோமாலிய கடற்கொள்ளையர்களினால் நான்கு ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று இலங்கையர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று இலங்கையர்கள் அடங்கிய 11 கப்பல் தொழிலாளர்கள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர கப்பல் ஒன்றை கடத்திய கடற் கொள்ளையர்கள் குறித்த கப்பல் தொழிலாளர்களை பணயமாக வைத்து பணம் பெற்றுக்கொள்ள முயற்சித்திருந்தனர்.

எம்.வீ அபேடோவ்என்றகப்பலின இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், ப்ாகிஸ்தான் மற்றும் ஈரானைச் சேர்ந்த தொழிலாளர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சோமாலிய கடற்கொள்ளையரகளில் சிலர் குறித்த கப்பல் பணியாளர்களை, ஏனைய கடற் கொள்ளையரகளுக்கு தெரியாமல் விடுதலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர்களை கடற் கொள்ளையர்கள் கடுமையாக சித்திர வதை செய்துள்ளதாகக் குறிப்பிடப் படுகிறது. (2)

# பதிவு செய்யப்படாத தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்படும்

பதிவு செய்யாமல் பயன்படுத்தப் படுகின்ற கையடக்கத் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப் படும் என தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கையடக்க தொலைபேசி இணைப்புக்களை பதிவு செய்வதற்கு போதுமானளவு கால அவகாசம் வழங்கப் படும் என ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட கூறியுள்ளார்.

குறித்த காலப் பகுதிக்குள் பதிவு செய்யப்படாத கையடக்க தொலைபேசி இணைப்புக்கள் உரிய தொலை பேசி நிறுவனங்களால் துண்டிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது 20 மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் கையடக்க தொலைபேசி இணைப்புக்களை பயன்படுத்துகின்றனர்.

இதில் ஐந்து வீதமானவர்கள் தமது பெயர்களில் சிம் அட்டைகளை பதிவு செய்யாதவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

இதுவரை பதிவு செய்யப்படாத கையடக்க தொலைபேசி இணைப்புக்களை உடனடியாக பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (2)

# ஐ.நா.விசாரணைக்குழுவின் இணைப்பாளர் நியமனம்

## நவநீதம்பிள்ளை அறிவிப்பு



**இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற் கான ஐ.நா.விசாரணைக் குழுவின் இணைப்பா ளராக மனிதவுரிமைகள் தொடர்பிலான நிபுணர் சன்ட்ரர் பெய்டாஸ் அம்மையார் நியமிக்கப்பட்டுள்ளார்.**

இந்த நியமனம் தொடர்பில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்று முன்தினமிரவு இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

இவரை ஜெனீவாவுக்கு இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரிய சிங்கவுக்கு ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் விரைவில் அறிமுக்ம் செய்து வைக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானியாவில் பிறந்த பிரபலமான மனிதவுரிமைகள் தொடர்பிலான நிபுணர் சன்ட்ரா பெய்டாஸ் அம்மையார் தற்போது அமெரிக்காவில் வசித்து வருகின்றார்.

நியூயோர்க்கை தளமாகக் கொண்டு செயற்படும் மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தில் ஆரம்பத்தில் பணியாற்றியிருந்த இவர் பின்னர் ஐநாவின் மூத்த மனிதவுரிமைகள் அதிகாரியாகப் பணியாற்றி இருந்தார்.

சோமாலிய மற்றும் தென்சூடான் ஆகிய நாடுகளின் மனிதவுரிமைகள் நிலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்குழுவிலும் இவர் பங்கேற்றிருந்தார்.

தென்சூடானின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் ஐ.நா. வெளியிட்ட அறிக்கையின் தொடர்ச்சியாக 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 48 மணித்தியாலத்தில் இவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# இலங்கையின் ஆதரவை குவைத் கோரியுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்புரிமையை பெற்றுக கொள்ள குவைத் அரசாங்கம், இலங்கையின் ஆதரவை கோரி யுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள குவைத்தின் பிரதி சபாநாயகர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். குவைத்தின்சபாநாயகர்முபாரக் அல் [illegible] சந்தித்து உரையாடியுள்ளார். இதன்போது இலங்கையில் முதலீடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா கடத்திய மூவர் கைது

கெப் வாகனம் ஒன்றில் கஞ்சா கடத்திச் சென்ற மூன்று பேர் புத்தளம் மாவட்டம் ஆனமடுவ தோணிகல் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனமடுவ பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இந்த நபர்களை கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்த 7.5 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் குளியாப்பிட்டி மற்றும் கணேமுல்லை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் புத்தளம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (2)


## பொது மக்களுக்கான அறிவித்தல்

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(31.05.2014 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
11. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. சிற்றி பாங்க் என்ஏ
14. செலான் பாங்க் பிஎல்சி
15. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
16. டொயிச் பாங்க் ஏஜி
17. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
19. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
20. பப்ளிக் பாங்க் பேர்காட்
21. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
22. மக்கள் வங்கி
23. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
24. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
25. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிரடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ரான்டட் கிரடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
33. ப்ரெக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதே வேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் சில தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒருங்கிணைப்பு செயற்பாட்டின் கீழ் இணைக்கப்பட/கையகப்படுத்தப்பட/உட்கொள்ளப்பட இருக்கின்றன. இது குறித்து பொதுமக்களுக்கு அறியத் தருவது என்னவென்றால் இந்த ஒருங்கிணைப்பு செயற்பாடானது மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடனான உங்களது தற்போதைய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வைப்புக்களை எந்தவகையிலும் பாதிக்காது என்பதாகும்.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள, ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.


**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477106, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்:, 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(அ-75539)


# ஸ்ரீ அம்மா பகவானின் திருக்கல்யாண தினம் இன்று



ஸ்ரீ அம்மா பகவானின் திருக்கல்யாண தினம் ஜுன்மாதம் ஒன்பதாம் நாளான இன்றாகும்.

உலக மக்களுக்கு சம்பூர்ண ஜீவன் முக்தி எனும் திருவருட்ப்பிரசாதத்தை அளிப்பதற்காக இப்பூவுலகில் அவதரித்த பரமாத்மா சொரூபினரான ஸ்ரீ அம்மா பகவான் தமது சங்கல்பத்தை நிறைவேற்றுவதற்காக சர்வ லோக தேவர்களும், புண்ய புருஷர்களும் மகிழ கல்யாணபந்தத்தில் ஒன்றிணைந்த சுபதினம்.

ஸ்ரீ கல்கி தர்மத்தில் ஸ்ரீ அம்மா பகவானின் திருக்கல்யாண உற்சவம் **லோக கல்யாணம்** எனச் சிறப்பிக்கப்பட்டு உலகெங்குமுள்ள பக்தர்களால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருக்கல்யாணம் மானிட வாழ்வில் ஓர் புனித சடங்காகும்.

ஸ்ரீ அம்மா பகவானின் திருக்கல்யாண தினம் **உறவு முறைகளின் தினம்** (The day of Relationship) எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

**ஸ்ரீ பகவான் ஸ்ரீ பகவதி பத்மாவதி** சமேதராய் சம்பூர்ண அவதார காட்சி தரும் புண்ணிய **லோக கல்யாண** நன்னாளில் நாம் அனைவரும் சௌபாக்கியங்களை பெறுவோமாக. (2)

# தேர்தலை பலப்படுத்த விசேட குழு அமைப்பு

## அமைச்சர் பசில் தலைமையில்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு அமைப்பு ரீதியான நடவடிக்கைகளை பலப்படுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

21 பேரைக் கொண்ட இக்குழுவில் சிரேஷ்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மாகாண முதலமைச்சர்கள் சிலரும் அங்கம் வகிக்கின்றனர்.

இக் குழு கடந்த 6ஆம் திகதி முதன் முறையாக கூடி எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளது. (2)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 34.25 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: O/L (கனடா – சிற்றிசன்)<br>தொ.இ: B/3218 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 27.5<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: BSc விஞ்ஞான பட்டதாரி / Demo<br>தொ.இ: G/3241 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 26<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: A/L / Photo grapher, Album Designer<br>தொ.இ: B/3219 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 42.75<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்<br>தொ.இ: G/3245 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 23.75 செவ் 7 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: GAQ பட்டதாரி / ஆசிரியர்<br>தொ.இ: B/3220 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 50 செவ் 4 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: வர்த்தகம் / அரச தொழில் (அவுஸ்திரேலியா - சிற்றிசன்)<br>தொ.இ: G/3247 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 36 செவ் 7 இல்<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்: BSc, Med / ஆசிரியர்<br>தொ.இ: B/3221 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 28.25 செவ் 1 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3248 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரின் முடிபுகள் வெட்டொன்று துண்டு இரண்டாக இருக்குமா?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதுடில்லிப் பயணம், இலங்கை அரசாங்கத்துக்கு சாதகமானதாக அமைந்ததா என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கிறது.

இந்திப் பிரதமர் நரேந்திர மோடியுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடத்திய சந்திப்புக் குறித்த முழுமையான விபரங்களை வெளியிடாமல், ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப்பிரிவு மறைத்துவிட்டதால்தான் இந்தக் கேள்வி வலுப்பெற்றுள்ளது.



நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசாங்கம்தான் இந்தியாவில் அடுத்து ஆட்சியமைக்கப் போகிறது என்று தெரிந்ததுமே, நரேந்திர மோடிக்கு நெருக்கமானவர்களைக் கொண்டு அவரை அணுக முயன்றிருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

சுப்பிரமணியன் சுவாமி, சிவேசனா தலைவர் உத்தவ் தாக்கரே போன்றவர்களின் மூலம், நரேந்திர மோடியுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவர், பலமாதங்கள் முன்னதாகவே காய்களை நகர்த்தியிருந்தார்.

வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தபோதே, நரேந்திர மோடியை தொலைபேசியில் அழைத்து முதன் முதலாக வாழ்த்துக் கூறிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவருடன் முதல் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டார். அந்த இணைப்பை எப்படி நெருக்கமாக்கிக் கொள்ளலாம் என்று அவர் காத்திருந்தபோதுதான், பழம் நழுவில் பாலில் விழுந்தது போல, பதவியேற்பு விழாவுக்கான அழைப்பு கிடைத்தது. அந்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி செயலகம் உறுதிப்படுத்த முன்னரே, அவர் எப்படியும் புதுடில்லி செல்வார் என்பது உறுதியாகிவிட்டது. ஏனென்றால், புதுடில்லியின் கதவுகள் எப்போது திறக்கும் என்று காத்திருந்த நிலையில் அழைப்பு வந்தவுடன் அது ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக, கடந்த மாதம் புதுடில்லி சென்றிருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. மறுநாள் செவ்வாய்க்கிழமை ஹைதராபாத் இல்லத்தில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தனது பதவியேற்பு விழாவுக்கு வந்திருந்த வெளிநாட்டுத் தலைவர்களை சந்தித்திருந்தார். அன்று காலை சுமார் 10.38 மணி தொடக்கம், சுமார் 11 மணி வரையான 20 நிமிடங்கள்– ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை அவர் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்கள் வெறும் அறிமுகப்படுத்தலுக்கானதாக–மரியாதை நிமித்தமானதாக மட்டும் அமைந்திருக்கவில்லை.

இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தொடர்பான இந்தியாவுக்கு சவாலான விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்புகளில் பேசப்பட்டுள்ளன. வெறும் நலன் விசாரிப்பு, சம்பிரதாயமான உரையாடல்கள் என்று கழிந்து போகாமல், குறுகிய நேரச் சந்திப்புகளின் போதே முக்கிய பிரச்சினைகளைக் கையில் எடுத்துக் கொண்டதன் மூலம் நரேந்திர மோடி தனது இயல்பை– சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு உணர்த்தியுள்ளார் என்றே தெரிகிறது.

நரேந்திர மோடிக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் பேசப்பட்ட விவகாரங்கள் குறித்து ஜனாதிபதி செயலகம் ஒரு அறிக்கையை வெளியிட்டது.

அதுபோலவே, சார்க் நாடுகளின் தலைவர்களுடன் நரேந்திரமோடி என்ன பேசினார் என்ற விபரத்தை செய்தியாளர்களிடம் வெளியிட்டார் இந்திய வெளிவிவகாரச் செயலர் சுஜாதா சிங்.

இந்த இரண்டு நாடுகளின் கூற்றுகளுக்கும் இடையில் சில விடயங்களில் பொருத்தமின்மை தெரிகிறது.

நல்லிணக்க முயற்சிகள், மீள்கட்டுமான நடவடிக்கைகள், இருதரப்பு விவகாரங்கள் மற்றும் சார்க் நாடுகளின் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ளல் போன்ற விடயங்கள் குறித்து இருதலைவர்களும் பேசினார்கள் என்று கூறியது ஜனாதிபதி செயலக அறிக்கை.

ஆனால், 13 ஆவது திருத்தச் சட்டத்தைமுழுமையாகநடைமுறைப்படுத்துவது குறித்து, அதற்கு அப்பால் செல்ல வேண்டியது குறித்து, தமிழர்கள் சமத்துவமாக, நீதியாக, கௌரவமாக வாழத்தக்க நல்லிணக்க நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்வது குறித்து, சம்பூர் அனல் மின் நிலையத்தை விரைவாக அமைப்பது குறித்து, மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து– என்று முக்கியமான பல விவகாரங்கள் பேசப்பட்டன என்பதை உறுதிப்படுத்தினார் சுஜாதா சிங்.

இவையெல்லாம், ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையில் மிகக் கவனமான முறையில் தவிர்க்கப்பட்டிருந்தன.

ஏனென்றால் இவையனைத்தும் இலங்கை அரசுக்கு நெருக்கடியை, சங்கடத்தை ஏற்படுத்தும் விடயங்கள்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன், அதற்கு அப்பால் செல்வது குறித்தும், நரேந்திரமோடி வலியுறுத்தியிருப்பது அரசாங்கத்துக்கு சிக்கலான விடயம்தான்.

இதுபோன்று இந்தியத் தரப்பில் வலியுறுத்தப்படுவது இதுதான் முதன்முறை என்றில்லை. மன்மோகன் சிங்கும் அவ்வப்போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்திக்கும்போதெல்லாம் இதனை வலியுறுத்துவதுண்டு. ஆனால், அதனை ஒரு காதால் கேட்டு மறு காதால் வெளியே விட்டுவிடுவதே இலங்கை அரசின் வழக்கம்.

எனினும், இப்போது நரேந்திர மோடி அரசாங்கம் இதனை வலியுறுத்தியுள்ள நிலையில் என்ன செய்வது என்ற குழப்பம் அரசாங்கத்துக்குள் ஏற்பட்டிருக்கும். ஏனென்றால், நரேந்திர மோடியின் அணுகுமுறை எவ்வாறாக இருக்கும் என்பதை உடனடியாக அனுமானிக்க முடியாது.

மன்மோகன்சிங்கைப் பற்றி ஏற்கனவே தெளிவாக எடை போட்டிருந்ததால், அவர் என்ன செய்வார்; எதைச் செய்யமாட்டார் என்பது அரசாங்கத்துக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. எனவே, அவருக்கு அளித்த வாக்குறுதிகளை காப்பாற்ற வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கவேயில்லை.

ஆனால், நரேந்திர மோடி அவ்வாறானவரில்லை என்பதுடன் அவர் தேசிய அரசியலுக்கே புதியவர். மாநில அரசியலில் இருந்த அவர், திடீரென தேசிய அரசியலுக்கு வந்து பிரதமரும் ஆகிவிட்ட நிலையில் அவரது முடிபுகள் வெட்டென்று துண்டு இரண்டாக இருக்குமா அல்லது நெகழ்ந்து போகும் தன்மை கொண்டதாக இருக்குமா என்பதை, சிறிது காலம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

ஆனாலும் அவர் முதல் சந்திப்பிலேயே 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் அதற்கு அப்பால் செல்லவும், அழுத்திக் கூறியிருப்பதை அரசாங்கத்தினால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

ஜனாதிபதி செயலகம் இதுபற்றி ஏதும் குறிப்பிடாததில் இருந்தே இதனைப் புரிந்துகொள்ள முடிகிறது.

அதுமட்டுமன்றி, வடக்கிலிருந்து படையினரை வெளியேற்றுதல், படையினர் மேற்கொள்ளும் நில அபகரிப்பை நிறுத்துதல், பொலிஸ் நிர்வாகத்தை மாகாணசபையிடம் ஒப்படைத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் நரேந்திரமோடி வலியுறுத்தியதாக சில தகவல்கள் கூறுகின்றன.

இவையெல்லாம் இலங்கை அரசாங்கத்துக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்திரா காந்தி காலத்துக்குப் பின்னர் இந்தியாவினது போக்கில் இறுக்கம் தென்படுவதாக சில ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

நரேந்திர மோடி குறித்து எச்சரிக்கையுடன் இருந்த இலங்கை அரசாங்கம், பதவியேற்பு விழா அழைப்பினால் அகமகிழ்ந்து போனாலும் அது தொடர்ச்சியாக நிலைத்திருக்கமா என்ற கேள்வி உள்ளது.

புதுடில்லியிலிருந்து நாடு திரும்பிய மறுநாளே, சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரையும் மின்சக்தி அமைச்சின் செயலரையும் ஜனாதிபதி பணித்துள்ளார். இந்த திட்டம் இவ்வளவு காலமும் கிடப்பில் போடப்பட்டதற்குக் காரணம் இலங்கை அரசாங்கம்தான்.

இந்த திட்டம் 2016 ஆம் ஆண்டு முடிவடையும் வகையில் ஆரம்பத்தில் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டது. இப்போதைய நிலையில் இதற்கான பணிகள் தொடங்கப்பட்டால் கூட, 2018 ஆம் ஆண்டில்கூட அது நிறைவு பெறுமா என்பது சந்தேகம்தான்.

சம்பூர் அனல்மின் திட்டத்தை அமைப்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது. இதுவரை இழுத்தடித்து வந்த இலங்கை இப்போது அதனை விரைவுபடுத்த உத்தரவிடப்பட்டுள்ளது என்றால், புதுடெல்லியின் தொனியை– போக்கையிட்டு இலங்கை அரசாங்கம் உசாரடைந்துள்ளது என்றுதான் அர்த்தம். இதன் மூலம் புதுடில்லியின் அழுத்தங்களைத் தவிர்க்க அரசாங்கம் முனைகிறதா என்று அல்லது மற்ற விவகாரங்களில் புதுடில்லியின் தீவிரத் தன்மையை தணிக்க முனைகிறதா என்று பார்க்க வேண்டும்.

அதேவேளை, நரேந்திர மோடி அரசாங்கத்தின் அணுகுமுறையானது, அயல்நாடுகளுடனான சிறந்த உறவுகளைப் பேணுவதாக மட்டும் இருக்காமல் பிராந்திய வல்லரசு என்பதையும் இந்தியா நிலைநாட்ட வேண்டும் என்ற கருத்து புதுடில்லியில் வலுவடைந்துள்ளது.

இது இலங்கைக்கு சற்று கலக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயம்.

அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் இதுவரை புதுடில்லியின் கருத்துக்களை செவிமடுக்காத இலங்கை அரசாங்கத்தை இனிமேலும் அவ்வாறு இழுத்தடிக்க நரேந்திர மோடி அரசு அனுமதிக்காது.

ஏனென்றால், அது இந்தியாவின் பிராந்திய முதன்மை நிலைக்கு சவாலாக அமையும். அது இலங்கை அரசுக்கு பாதகமான விடயமாகவே இருக்கும். எனவே, இந்தியா பிராந்தியத்தில் தனது முதன்மை நிலைக்கு சவாலான– அதற்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியஎதையும்செய்ய இலங்கையை அனுமதிக்காது.

இந்த வகையில் பார்த்தால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதுடில்லிப் பயணம் நரேந்திர மோடியுடன் ஒரு அறிமுகத்தை ஏற்படுத்திக்கொள்ள முடிந்துள்ளதே தவிர, அதற்கப்பால் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்திக் கொள்வதற்கான பெரும் பாய்ச்சல் என்று கூற முடியாது.

அதேவேளை, இந்திரா காந்தியின் பாணியில் இலங்கை விவகாரத்தைக் கையாள்வதற்கான விசேட தூதுவர் ஒருவரை நியமிப்பது குறித்து நரேந்திர மோடி ஆலோசிப்பதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

அத்தகையதொரு தூதுவர் நியமிக்கப்படுவாரேயானால், இது இலங்கைக்காகநெருக்குவாரங்களையே அதிகப்படுத்தும். அத்தகைய முடிபை நரேந்திர மோடி எடுத்தால் அது நிச்சயம் இலங்கைக்கான தோல்வியாக இருக்குமே தவிர, இந்தியாவுடன் புதிய உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சியின் வெற்றியாக அமையாது.

–தொல்காப்பியன்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை இவ்வருடம் பூர்த்தி

## பாராளுமன்றில் அமைச்சர் அதாவுல்லா



உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை நிர்ணயிக்கும் வகையில் நியமிக்கப்பட்ட தேசிய எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா பாராளுமன்றத்தில் தெரிவிததுள்ளார்.

2012 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட இந்தக்குழு நகல் வரைபொன்றை தயாரித்திருப்பதாகவும் அதனை ஆய்வு செய்யும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க 23/2 ஆம் இலக்க நிலையியற கட்டளையின்கீழ்எழுப்பிய கேள்வக்கு பதிலளிக்கும் போதே அமைசசர் மேற்கண்டவாறு கூறினார்.

2015ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் தேசிய குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்படும். உள்ளூராட்சி சபை தேர்தல்களுக்கு இதனால் எந்தப்பாதிப்பும் ஏற்படாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசிய எல்லை நிர்ணய குழு 2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அமைக்கப்பட்டது. மாவட்ட ரீதியில் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இந்தக் குழுவின் ஆயுட்காலம் மேலும் 9 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. இக்குழு நகல் வரைவொன்றை தயாரித்துள்ளது. இதனை ஆய்வு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணயத்தின் போது பல்வேறு பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் புதிய உள்ளூராட்சி சபைகளை உருவாக்க வேண்டுமென்ற பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்றை அமைப்பது தொடர்பிலும் ஆராய்ந்து வருகிறோம்.

தேசிய எல்லை நிர்ணயம் தொடர்பான இறுதி அறிக்கை உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை பாதிக்காத வகையில் வெளியிடப்படும். அவ்வாறு இயலாது போனால், ஆட்சிக்காலம் முடிந்த உள்ளூராட்சி சபைகளில் கால எல்லையை நீடிக்க அமைச்சருக்கு அதிகாரம் இருப்பதாகவும் அமைச்சர் ஏ. எல்.எம்.அதாவுல்லா மேலும் தெரிவித்தார். (2)

# பதிவு செய்யப்படும் வாகனங்களின் விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்

## மோட்டார் பதிவு திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பதிவு செய்யப்படுகின்ற அனைத்து வாகனங்களின் விபரங்களையும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் முதல் இந்த வாய்ப்பு கிட்டும் என்று மோட்டார் பதிவு திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வாகனங்கள் தொடர்பில் ஏற்படுகின்ற முறைகேடுகள் மற்றும் துஷ்பிரயோக சம்பவங்களை கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த இணையத்தளத்தின் மூலம் வாகனங்களின் பெயர்கள் மற்றும் அவை தொடர்பான அனைத்து விபரங்களும் பிரசுரிக்கப்படவுள்ளன.

எனினும் முகவரிகள் குறிப்பிடப்படமாட்டாது.

இந்த இணையத்தளத்துக்குள் பிரவேசிக்க கட்டணமாக 150 ரூபாவை கடன் அட்டைகளின் மூலம் செலுத்த வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# பல வருடங்களுக்குப்பின் நீராவி புகையிரதச்சேவை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள நீராவி புகையிரதம் ஒன்று பல வருடங்களுக்கு பின் கொழும்பில் இருந்து பண்டாரவளை புகையிரத நிலையம் வரை நேற்று முன்தினம் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

புகையிரதம் அறிமுகமாகி தற்போது 200இற்கும் மேற்பட்ட வருடங்களாகிறது. புகையிரதம் ஆரம்பத்தில் நிலக்கரி மூலம் நீராவி புகையிரதமாக இயங்கியது.

இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகள் இந்த புகையிரதத்தில் செல்வதற்கு மிகவும் ஆர்வம் காட்டுவது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

அந்தவகையில் நேற்று முன்தினம் பயணித்த புகையிரதத்தில் சுற்றுலா பயணிகளும் சென்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய காலகட்டத்தில் இயங்கும் புகையிரதத்தில் சாரதிகளுக்கு பல வசதிகள் இருந்தாலும் அக்காலத்தில் இயங்கிய நீராவி புகையிரதத்தில் சாரதிகளுக்கு எந்தவிதமான வசதிகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த புகையிரதம் ஹற்றன் புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது அதிகளவான மக்கள் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கேற்க போவதில்லை

## அமைச்சர் டியூ குணசேகர உறுதி



(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்காக அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இனிவரும் காலங்களில் பங்கேற்கப் போவதில்லை என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அமைச்சர் டியூ குணசேகர அறிவித்துள்ளார்.

இந்த குழுவில் ஆராய்வதற்கு எந்த விடயங்களும் இல்லையென்பதால் இந்த முடிவை எடுத்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் குழுவில் பங்கேற்றால் தம்து கட்சியும் அதில் பங்கேற்கும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் நன்மை கருதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சி யும் நிபந்தனைகள் விதிப்பதை விடுத்து ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றுக்கு வரவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (2)

# இன்று ஒரு தகவல்

## சும்மா இருப்பது

ஒரு சொற்பொழிவு மண்டபம். அங்கே, " மௌனவிரதம்" என்ற தலைப்பில் ஒருவர் மணிக்கணக்காக உரையாற்றிக் கொண்டிருந்தார்.

நான்கு நண்பர்கள் அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

மறுநாட்காலை அவர்கள் நான்கு பேரும் ஓரிடத்தில் கூடி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அதாவது இப்போது முதற்கொண்டு இன்னும் ஒரு வாரத்துக்கு நாம் நால்வரும் மௌனவிரதம் இருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தார்கள்.

அவ்வளவு தான்.

எல்லோரும் வாயை மூடிக்கொண்டார்கள். மௌன விரதம் ஆரம்பமானது.

சிறிது நேரம் தான் சென்றிருக்கும். அதற்குள் ஒருவன் "இப்பத்தான் ஞாபகம் வருகுது. நான் எங்க வீட்டு அடுப்பில நெருப்பை அணைச்சேனா.... இல்லையா என்று தெரியவில்லை " என்றான்.

உடனே அருகில் இருந்தவன்,

"அடப்பாவி... பேசி விட்டாயே.... நம்ம மௌன விரதம் என்ன ஆச்சு? என்றான்.

உடனே மூன்றாமவன்....

" இப்ப நீ மட்டும் என்ன? நீயும் தானே பேசி விட்டாய்..... " என்றான்.

இச்சமயத்தில் நாலாமவன்.

"நல்ல வேளை.... நான் ஒருத்தன் தான் பேசாமல் இருக்கிறேன்" என்றானாம். இப்போது என்ன ஆச்சு?.

எல்லோரும் பேசியாகி விட்டது. மௌனவிரதம் கலைந்து விட்டது. இப்படி ஒரு வேடிக்கைக் கதையைப் பெரியவர்கள் சொல்வதுண்டு.

சும்மா இருப்பதென்பது சிரமமான காரியம் தான். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நினைப்பவர்கள் சும்மா இருக்கக்கூடாது.

ஆனால், ஆன்மீகத்தைப் பொறுத்தவகையில் சும்மா இருப்பவனே சுகம் அடைகிறவன்.

மௌலங்கப்பட்டர் என்று ஒருத்தர் இருந்தாராம். அதிகம் படித்தவர். அனைத்தும் தெரிந்தவர், பெரிய மேதை அவர் ஒருநாள் புத்தரைத் தேடி வந்தாராம்.

அவரது கையில் கேள்விகளின் பட்டியல் இருந்தது. புத்தரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காகப் பல கேள்விகளைத் தயார் செய்து கொண்டு வந்திருந்தார். புத்தர் அவரைப் பார்த்ததும் என்ன சொன்னார் தெரியுமா?

"நாம் பேச வேண்டியதையெல்லாம் பின்னர் பேசலாம் சிறிது நாட்கள் நீங்கள் இங்கு தங்கியிருக்கவேண்டும் " என்றார் புத்தர்.

"சரி" என்றார் மௌலங்கப்பட்டர்.

நீங்கள் இங்கு இருக்கும் காலம் முழுவதும் பேசக்கூடாது. மௌனமாக இருக்கவேண்டும். கேள்வி எதுவும் கேட்கக் கூடாது. ஒரு வருடம் சென்றபின் கேள்விகளைக் கேட்கலாம் என்றார் புத்தர்.

அதற்கு சம்மதித்து இவர் அங்கேயே தங்கி விட்டார். ஒரு வருடம் உருண்டோடியது. அதன்பின் புத்தர் அவரை அழைத்தார்.

"இனிமேல் நீங்கள் கேட்க விரும்பிய கேள்விகளையெல்லாம் கேட்கலாம் " என்றார். "இனி மேல் கேட்பதற்கு ஏதுமில்லை " என்று சொல்லி விட்டு அவர் புறப்பட்டாராம்.

மௌனம் என்பது ஞானிகளின் மொழி. புரிகிறவர்களுக்குத்தான் அது புரியும்.

ஒரு வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் பாடம் கற்பித்துக் கொண்டிருந்தார்.

"பிள்ளைகளே!.... நீங்கள் எல்லோரும் உங்கள் பெற்றோருக்கு உதவியாக இருக்கவேண்டும். அவர்கள் என்ன சேவை செய்தாலும் அதற்கு நீங்கள் ஒத்துழைக்கவேண்டும்" என்றார். ஒரு பையன் எழுந்து, "சேர்! நான் எங்கள் வீட்டில் எப்பொழுதும் அப்பாவுக்கு ஒத்தாசையாக இருக்கிறேன்" என்றான்.

"அப்படித்தான் இருக்கவேண்டும்... சரி.... உன் அப்பா என்ன வேலை செய்து கொண்டிருக்கிறார்?"

"சும்மாதான் இருக்கிறார் " என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் பிரதேசத்தில் 961 முதியோர்கள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 961 முதியோர்கள் வசிப்பதாக பிரதேச செயலர் எஸ். குணபாலன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் மூவர் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளதோடு ஏனையோர் சமூக சேவை திணைக்களம் மற்றும் அமைச்சினாலும் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.




இதன்படி சமூக சேவை திணைக்களம் ஊடாக 60 தொடக்கம் 70 வயதிற்குட்பட்ட 679 முதியோர்களில் 500 பேருக்கு 250 தொடக்கம் 500 வரை மாதாந்த பண உதவி வழங்கப்படுகிறது.

அதேபோல், 70 வயதிற்கு மேற்பட்ட 282 பேரில் 270பேருக்கு மாதாந்தம் தலா ஆயிரம் ரூபாவும் 734 பேருக்கு முதியோர் அடையாள அட்டைகளும்பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

முதியோர்களின்தகவல்கள் அவர்களுக்கான தேவைகள் மற்றும் உதவிகள் வழங்குவதற்காக 16 முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டு சேவைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-15)

# ஒப்பந்த காலம் நிறைவடைந்தும் கட்டட வேலைகள் தாமதம்

(கண்டாவளை)

கண்டாவளை சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புதிய கட்டடத்திற்கான ஒப்பந்த காலம் நிறைவடைந்துள்ள போதிலும் கட்டட வேலைகள் நிறைவடையவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 6 சமுர்த்தி வங்கிச் சங்கங்களுக்கும் புதிய கட்டம் அமைப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டது.

இந்நிலையில், இக்கட்டங்களின் ஒப்பந்த காலம் கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்து விட்டது.

ஒப்பந்தகாலம் நிறை வடைந்து 6 மாதங்களாகியும் இது வரை கண்டாவளை சமுர்த்தி சங்கத் தின் கட்டட வேலைகள்நிறைவடைய வில்லை.

தற்போது வாடகை கட்டடமொன்றிலேயே வங்கியின் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

சம்பந்தப்பட்டோர் குறித்த கட்டட வேலைகள் தாமதம் அடைவதை கவனத்தில் எடுத்து வேலைகள் நிறைவடைய ஆவன செய்யுமாறு பிரதேச மக்கள்வலியுறுத்தியுள்ளனர். (9-263)

# வவு. மருக்காரம்பளை வீதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம்



(குருமன்காடு)

வவுனியா, மருக்காரம்பளை பிரதான வீதியில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையினால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த மதுபானசாலையில் மதுவினை வாங்கி வீதியோரங்களிலும் அருகில் உள்ள வீட்டு வேலியோரங்கள், குளப்பகுதி எனப் பரவலாக வைத்து மது அருந்துவதால் அங்கு வசிப்பவர்களும் பயணம் செய்பவர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

அத்தோடு போதையில் தகாத வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்துவதுடன் வீதிகளிலும் மதுப் பிரியர்கள் விழுந்து கிடக்கிறார்கள்.

குறித்த மதுபான சாலையில் மதுபானத்தினை வாங்கி செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் அங்கு வைத்து குடிப்பதற்கு அனுமதி இல்லை. எனினும் மதுப்பிரியர்கள் அங்கு வாங்கி அருகில் உள்ள வீதிகள், குளப்பகுதி, வீட்டு வேலிகரைகள் என மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில வைத்து மதுஅருந்தி வருகின்றனா.

எனவே, இது தொடர்பில் வவுனியா பொலிசார் கவனம் செலுத்த வேண்டும் என அப்பகுதி சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-250)

# வைத்தியசாலை வடிகாலமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தாமையின் நோக்கமென்ன? வைத்தியகலாநிதி சிவமோகன் கேள்வி

(குருமன்காடு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஒதுக்கீட்டில் UNOPS என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தினூடாக 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வவுனியா பொது வைத்திய சாலைக்கு கழிவு நீர் வடிகாலமைப்பு திட்டம் 2012ஆம் ஆண்டு உறுதி செய்யப்பட்டும் இதுவரை அத்திட்டம் முன்னெடுக்கப்படாமைககு காரணம் என்னவென வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கேள்வியெ முப்பியுள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா வைத்தியசாலை யின் கழிவு நீர் வழிந்தோடுவது சீர்ன்மையால் வைத்தியசாலையை அண்டிய நிலத்தடி நீர் அசுத்தமடைந்து வருவது சுகாதார திணைக்கள ஆய்வுகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இப்பிரச்சினைக்கு முடிவு காண ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிபங்களிப்புடன் UNOPS நிறுவனம் செயற்படுத்த முன்வந்த போதும் அத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

அத்தோடு, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கடந்த ஒரு வருடகாலமாக கூட்டப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

வவுனியா அரச அதிபரால் மேற்படி அத்தியாவசிய கூட்டத்தை ஏன் ஒரு வருடமாக கூட்டமுடியவில்லை என மக்கள் எம்மிடம் கேள்வியெழுப்புகின்றனர்.

மேற்படி கூட்டம் கூட்டப்படாமையால் மாவட்டத்தில் பல அத்தியாவசிய தீர்மானங்கள் எடுக்கப்படாதுள்ளன.

வடிகாலமைப்பு திட்டத்துக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் தடையாக இருப்பதாக மக்கள மத்தியில் கருத்து நில வுகின்றது.

எனினும், உண்மைகள் வெளிக் கொண்டு வரப்பட வேண்டுமெனில் அனைத்து வன்னி மாவட்ட பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினரகள் அரச அதிகாரிகள் உள்ளடங்களாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை நடத்துவது அவசியம்.

எனவே, இதற்குரிய நடவடிக்கைகளை அரச அதிபர் உடன் எடுக்க தவறும் பட்சத்தில் மக்கள் அதை கையில் எடுக்கும் தருணம் உருவாகும் என்றார். (9-250)


# அபிவிருத்திகளுக்காக ஏங்கும் கோரக்கன்கட்டு கிராமம்

(குருமன்காடு)

யுத்தம்முடிவடைந்துபலவருடங்கள் கடந்துள்ள போதும் பரந்தன் கோரக்கன் கட்டு கிராம அலுவலகர் பிரிவுக்கு இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.இது தொடர்பாக கோரக்கன்கட்டு தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் எஸ்.சிவலோகநாதன் கருத்து தெரிவிக்கையில்,

2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இப்பகுதி மக்களுக்கு பல அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமலிருந்து வருகின்றது. கோரக்கன்கட்டு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம விஸ்தரிப்பு திட்டம், குடியிருப்பு, வை.எம்.சி.ஏ. அருகாமை வீதி, பாலர் பாடசாலை வீதி, மயான வீதி, ஊரியன் வீதி ஆகிய பகுதிகளுக்கு மின்சார விநியோக நடவடிக்கைகள் மற்றும் வீதி புனரமைப்பு போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படாமல் உரிய அதிகாரிகளால் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இங்குள்ள மக்களினால்எமதுபகுதிகளுக்குகையொப்பம் இடப்பட்ட மகஜர் ஒன்று வவுனியாவில் அமைந்துள்ள வடக்கின் வசந்தத் திட்ட அலுவலகத்திற்கு கடந்த பெப்ரவரி மாதம் வழங்கப்பட்டது. அம் மகஜரை பெற்றுக் கொண்ட உரிய அதிகாரிகள் ஒரு மாதத்திற்குள் மின் விநியோகம் வழங்கப்படும் எனவும் வேலை இலக்கம் 81 என குறிப்பிட்டு தந்தனர். ஆனால், பல மாதங்கள் கடந்துள்ள நிலையில் எமது பகுதிக்கு



மின்விநியோகம் வழங்குவதில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வேளையில் அயல் கிராமங்களில் மின்சார விநியோக வேலைகள், வீதி புனரமைப்பு போன்ற வேலைத்திட்டங்கள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே எமது பகுதிக்கும் அபிவிருத்திவேலைத்திட்டங்களை முன்னெடுக்க மீண்டும் உரிய அதி காரிகளை கோருகின்றோம் என்றார். (9-250)

# வன்னி அரசாங்க உத்தியோகத்தர்களை இந்தியன் வீட்டுத்திட்டத்தில் உள்வாங்குக

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றியவர்களும் இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் இருந்து வந்துள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்குவதில் இழுத்தடிப்புச் செய்யப்படுவதாக பாதிக்கப்பட்டவர்களின் மனுவொன்றினை வடமாகாண முதலமைச்சருக்கும் ஆளுநருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


வன்னியில் இடம்பெற்ற யுத்த சூழலிலும் அரசநிர்வாகத்தை செயற்படுத்தி வந்ததுடன் பல்வேறு நெருக்கடிகளையும் சந்தித்திருந்தோம்.

இந்நிலையில், இறுதி யுத்தத்தில் சொத்துக்களை இழந்து வாழ வழியின்றி பொருளாதார நிலையில் அரச வேதனத்தை மாத்திரமே பெற்றுள்ளோம்.

நிர்க்கதியான நிலையில் மீள்குடியேறிய எமக்கு இலவசமாக வழங்கப்பட்ட சுகாதாரப்பெட்டி முதல் இந்தியன் வீட்டுத்திட்டம் வரை பெற்றுக் கொள்வதற்கு அரச அதிகாரிகள் தடை போடுவது வேதனை அளிக்கின்றது.

தற்போது வன்னியில் கடமையாற்ற வர மறுக்கும் அரச உத்தியோகத்தர்கள் பலர் உள்ளநிலையில் நாம் யுத்தத்திற்கு முகங்கொடுத்த நிலையிலும் அப்போதிருந்தே இன்று வரை கடமையாற்றி வருகின்ற போதிலும் எமக்கு வழங்கும் நீதி இதுவா எனக் கேட்கின்றோம்.

எனவே அனைத்தையும் இழந்து அரச உத்தியோகம் என்ற பெயரில் எவ்வித உதவிகளும் கிடைக்காமலுள்ள எமக்கு தற்போது பதியப்படும் இந்தியன் வீட்டிற்கான இறுதி பட்டியலில் எம்மையும் இணைக்குமாறு வேண்டுகிறோம். இவ்வாறு வேண்டு கோள் விடப்பட்டிருந்தது. (9-15)





கிளிநொச்சி பளை அறத்திநகர் சி.சி.த.க பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

இதில் மாணவியொருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதையும் கலந்து கொண்டவர்களை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பிரச்சினை தீர்வு குறித்து ஐந்து யோசனைகள் கிடைத்துள்ளன

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கும் இடையில் தென்னாபிரிக்க அனுசரணையில் நடைபெறும் பேச்சுக்கள் தொடர்பில் எவ்வித உறுதியான தகவல்களும் வெளியாகவில்லை என த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க தரப்பில் இருந்து இதுவரை பேச்சுக்கள் தொடர்பில் தகவல் எவையும் கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் தென்னாபிரிக்காவின் விசேட பிரதிநிதி விரைவில் இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் ஊடாக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் திறந்த நிலை பேச்சுக்களை நடத்த அரசாங்கம் தயார் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இனப் பிரச்சினை தீர்வுக்காக தமக்கு ஐந்து யோசனைகள் கிடைத்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது

தனிப்பட்டவர்கள் மற்றும் குழுக்களிடம் இருந்து இந்த யோசனைகள் கிடைத்துள்ளதாக கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின்போது த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இனப்பிரச்சினை தீர்வுக்கான யோசனைகளை தாம் வரவேற்பதாக அறிவித்திருந்தார்.

இதன்மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு புதிய முனைப்புக்களை மேற்கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை வரை ஐந்து யோசனைகள் கிடைத்துள்ளன.

இந்த யோசனைகளுக்காக ஒரு மாதக் காலப்பகுதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பு தரப்புக்கள் தெரிவித்துள்ளன. (2)

# நெடுந்தீவு கடற்பரப்பில் 32 இந்திய மீனவர்கள் கைது

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச் சாட்டில் 32 இந்திய மீனவர்களை கைது செய்துள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களை நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து நேற்று காலை கைது செய்த அதேவேளை அவர்கள் பயன்படுத்திய 8 படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று எல்லை மீறி நுழைந்த குற்றச்சாட்டில் 41 இந்திய மீனவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

715 இற்கும் மேற்பட்ட இயந்திரப் படகுகளில் இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் அதிகாலை இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

நேற்று முன்தினம் மன்னார் கடற்பரப்பில் வைத்து 42 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நேற்று அதிகாலை நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து 32 பேர் கைது செய்யப்பட்டனர். இதன்படி 74 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நல்லெண்ண அடிப்படையில் சிறைகளில் இருந்து அனைத்து இந்திய மீனவர்களையும் விடுத்ததாகவும் இதன் பின்னர் எல்லை மீறும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய மேலும் குற்றம் சுமத்தினார். (2)

# தமிழக மீனவர்களை விடுவிக்க மத்தியரசின் நடவடிக்கை என்ன?

## தமிழக காங்கிரஸ் தலைவர் கேள்வி

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீதான கைது தொடர்கதையாக நடக்கிறது. அவர்களை விடுவிக்க மத்தியரசு எடுத்த நடவடிக்கை என்ன, என தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது.

நரேந்திரமோடி தலைமையில் பா.ஜனதா அரசு அமைந்தால் அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று பாரதீய ஜனதா கட்சியினர் பிரசாரம் செய்தார்கள்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி நடந்த போது தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்ட போதும், கைது செய்யப்பட்ட பேரதும் காங்கிரஸ் ஆட்சியை குறைசொல்லி கடுமையாக விமர்சித்தார்கள்.

இன்று அவர்கள் சொன்னது போல் மத்தியில் மோடி தலைமையில் பா.ஜனதா அரசு அமைத்துள்ளது.

ஆனால், தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் கைதுகள் தொடர்கதையாக நடக்கிறதே. கடந்த சில தினங்களாக இலங்கை கடற்படை தமிழக மீனவர்களை சிறை பிடித்து வருகிறது. அவர்களை விடுவிக்க மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

பிரதமர் பதவி ஏற்பு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அழைத்து மகிழ்ந்த பா.ஜனதா அரசுதான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சியின் போது தமிழக மற்றும் இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. மீண்டும் இருநாட்டு மீனவர்களும் சந்தித்து பேச மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதன் மூலம்தான் இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த பிரச்சினைக்கு மத்திய அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கூறினார். (2)



ஈரானிய கலாசார அமைச்சர் அலி ஜனாட்டியும் இலங்கைக்கான தூதுவர் மொஹமட் பைசால் ராசின் ஆகியோருக்கும் இடையில் தெஹ்ரானில் இடம்பெற்ற சந்திப்பின்போது...

# தங்க பிஸ்கட்டுக்கள் கடத்த முயன்ற இந்திய பிரஜை கைது

(கொழும்பு)

தங்க பிஸ்கட்டுக்கள் இரண்டினை கடத்தி வந்த இந்திய பிரஜை ஒருவர் விமானநிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறிலங்கா எயார்லைன்ஸ் யூ.எல்.423 என்ற விமானத்தின் மூலம் பாங்கொக்கிலிருந்து நேற்று அதிகாலை இந் நபர் இலங்கை வந்துள்ளார்.

24 வயதான குறித்த நபர் ஆசன வாயில் தங்க பிஸ்கட்டுக்களை வைத்து கடத்த முயற்சித்துள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்டுக்கள் 396 கிராம் எடையுடையவை எனவும் அவற்றின் பெறுமதி 23 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தங்க பிஸ்கட்டுக்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது டன் சந்தேகநபர் பத்தாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (2)

# நாட்டில் வயிற்றோட்டம் பரவும் நிலை; அவதானம்

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் காய்ச்சல் ,இருமல்,தடிமன் போன்ற அறிகுறிகளுடன் வயிற்றோட்டம் பரவக் கூடிய அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுபிள்ளைகளிடையே பரவலாக குறித்த நோய் பரவியுள்ளமை அவதானிக்க முடிவதாகவும் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் எப்பகுதியிலும் இந்த நோய் அறிகுறிகள் அல்லது காய்ச்சல் ஏற்படுமாயின் உடனடியாக அருகிலுள்ள வைத்தியரை நாடுமாறும் பணியகம் வலியுறுத்தியுள்ளது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி அந்தோனிப்பிள்ளை சிசிலியா

குருநகர் ஓடக்கரை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை சிசிலியா கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 4 மணிக்கு மரியன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### ராகவன் சத்தியசிலன்



கரவெட்டி மேற்கு சாமியன் அரசடியைப் பிறப்பிடமாகவும் லண்டன்New Malden ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ராகவன் சத்தியசீலன் கடந்த மே மாதம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு Tudor Drive, Morden SM4 4PJ,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி மகேந்திரன் தனபாக்கியவதி

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது மல்லாகம், நீலம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் தனபாக்கியவதி (முன்னாள் ஆசிரியர் யூனியன் கல்லூரி)கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழ்மை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### பரமலிங்கம் திருஞானலிங்கம்



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமலிங்கம் திருஞானலிங்கம் கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மம்மில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி நடராஜா செல்வதி



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் இல.29, குட்செட் வீதி வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா செல்வதி கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் தின நிகழ்வுகள் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இடம்பெற்ற கலை நிகழ்வின் ஒரு பகுதியையும் யாழ். மாவட்டத்தின் சிறந்த இளைஞர்களுக்கான விருதினை யாழ்.மாவட்ட அரச அதிபர், க.உஷாந்தனுக்கு வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)




வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி. நாக ரஞ்சினி ஐங்கரன் தலைமையில் சிறுவர்களை பாதுகாக்கும் நோக்குடன் விழிப்புணர்வு அண் மையில் நடைபெற்றது. இந்நிக ழ்வில் வளவாளராக கலந்து கொண்ட ஸ்ரீ.கஜேந்திரன் உரை யாற்றுவதையும் கலந்து கொண்ட சிறார்களையும் படங்களில் காணலாம்.

வலி.தெற்கு உடுவில் பிரதேச சபையின் கீழான மருதனார்மடம் பொதுச் சந்தைக்கான அத்தி வாரத்தினை தவிசாளர் தி.பிரகாஷ் நாட்டி வைப்பதையும் கிரியைகள் நடைபெறுவதையும் இதன்போது கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர் )




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 39

அஜன் அஜந்தன்




தரண்யா தரணி




கவின் ராஜேஸ்




தீபா பிரதீபா



அஜந் குலசிங்கம்




சிவா சக்தி

**வாட் இஸ் லவ்**

ஒரு குளத்துல
கொக்கு இருக்கும் (பொண்ணு)
மீனு இருக்கும் அது (பையன்)
தண்ணி இருக்கும் அது (பணம்)
தண்ணி வற்றிப் போனா கொக்கு
பறந்து விடும்.
மீனு செத்துப் போயிடும்.
**தட் இஸ் லவ்**

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையே இனிமையான எதிர்காலங்களை உருவாக்குகிறது.

- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தீவகத்தை அபிவிருத்தி செய்ய புதிய திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்

வலி வடக்கில் மீளக்குடியமர்வதற்குப் படையினர் அனுமதிவழங்கவில்லை என்பதால் அப்பகுதியில் மக்கள் மீள்குடியமர முடியாமல் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

விவசாயச் செய்கையில் பெரும் விளைச்சல்களைத் தரக்கூடிய வலி வடக்குப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர படைத்தரப்பு மறுப்பதனால், எங்கள் விளைநிலங்கள் வீணாகிப் போகின்ற பரிதாப நிலை காணப்படுகின்றது.

இது ஒரு வகையான பிரச்சினை. இதற்கு அப்பால் தீவுப்பகுதியை எடுத்துக் கொண்டால், அங்கு மீள்குடியமர்வதற்குத் தடைகள் இல்லையாயினும் தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அங்கு மீளவும் குடியமர்வதற்கு ஆர்வம் காட்டாதவர்களாக இருக்கின்றனர்.

இதன் காரணமாக தீவகத்தில் மீளக்குடியமர்ந்தவர்களும் தனிமைப்படுத்தப்பட்ட வாழ்வியல் சூழமைவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு காலத்தில் தீவகம், மக்கள் செறிந்த பிரதேசமாக விளங்கியது. விவசாயம், கடற்றொழில், வர்த்தகம் என்றவாறு பொருளாதாரப் பங்களிப்பைச் செய்த தீவக மக்கள் கல்வியிலும் பெரும் சாதனை படைத்தனர்.

ஆனால் இடப்பெயர்வுகாரணமாக ஒருசில இடங்களைத்தவிர, தீவகத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து முற்றுமுழுதாக மக்கள் வெளியேறியிருந்தனர்.

இவ்வாறு வெளியேறிய மக்கள் தமது தீவக மண்ணில் மீளவும் குடியமரப் பெருவிருப்பம் கொண்டனராயினும் கால நீட்சிகாரணமாக அவர்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, வெளிநாடு என்றவாறு தங்கள் இருப்பிடங்களை மாற்றிக் கொள்ள, இப்போது தீவகம் மிகக் குறைந்த மக்கள் வாழும் பகுதியாக மாறிவிட்டது.

வயல் நிலங்கள் விதைப்பின்றி வானம் பார்த்த பூமியாக இருக்க, வாழ்விடங்களும் பயிர் செய் நிலங்களும் பற்றைக்காடுகளாகக் காட்சி தந்து அங்கு மீளக்குடியமர்ந்தவர்களுக்கும் இடஞ்சல் செய்கின்றன.

வளம் நிறைந்த தீவகத்தில், மக்கள் செறிவு குறைந்துள்ளமை மிகவும் துர்ப்பாக்கியமான நிலைமையாகும்.

எனவே தீவகத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது பற்றிய விசேட திட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

இதற்கு மேலாக, தீவகப் பகுதியை அபிவிருத்தி செய்வது குறித்து ஆக்க பூர்வமான திட்டங்களை உருவாக்குவதும் அவசியமாகும்.

புதிதாக மக்களை மீள்குடியமர்த்துதல் என்பதற்கு முன்னதாக; தீவகத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரங்கள், வசதி வாய்ப்புகள், கல்வி, சுகாதார மேம்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அப்போதுதான், தற்போது தீவகத்தில் குடியமர்ந்தவர்களாவது நிரந்தரமாக அங்கு இருக்க விரும்புவர்.

ஆக, தீவகத்தின் நிலைமை குறித்து கவனம் செலுத்துவது கட்டாயமாகும். இல்லையேல் ஒரு பெரும் பகுதி, மக்கள் குடியிருக்காத இடமாகிப் போகின்ற நிலைமை தவிர்க்க முடியாததாகி விடும்.

# தேவரையாளி வீதி செப்பனிடப்படுமா?

## பிரதேசசபைக்கு மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

கரவெட்டி தேவரையாளி கிராம பிரதான வீதி நீண்ட காலமாக செப்பனிடப்படாது காணப்படுவதாக அப்பிரதேசவாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட குறித்த வீதியானது கடந்த 40 வருட காலமாக திருத்தப்படாது மண் வீதியாகவே காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியால் செல்லும் பொதுமக்கள் புழுதிகள் அள்ளுண்ட நிலையில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள், வேலைக்கு செல்வோர் என பலர் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே தினமும் இவ்வீதியால் தமது பயணத்தை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அப்பிரதேச மக்களால் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு அண்மையில் கோரிக்கை விடப்பட்டது.

ஆனால் இதுவரை காலமும் மேற்படி வீதி திருத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெறவில்லை.

எனவே குறித்த வீதியினை மக்களின் சீரான போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் தார் இட்டு செப்பனிடுமாறு அப்பிரதேச மக்கள் வடமராட்சிதெற்கு மேற்கு பிரதேச சபைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-60)

# குடமுழுக்கு

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் நாவலர் வீதி- மடத்தார் பதி உறையும் ஸ்ரீ சீரடி சாயிபாபாவின் நூதன உற்சவ மூர்த்திக்கான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் காலை 8.30 தொடக்கம் 10 மணி வரை அடியார்கள் பால்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று திருவூஞ்சல், பாபாவின் வீதி உலா என்பன இடம் பெறும். தொடர்ந்து 24 நாட்கள் மாலை 4 மணிக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். (2)

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

(சாவகச்சேரி)

மீசாலை கிழக்கு சித்திர வேலாயுத சுவாமி ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகத் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் விசேட கிரியைகளைத் தொடர்ந்து மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 10 மணி தொடக்கம் பற்பகல் 4 மணிக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து ஆசியுரைகளை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், மீசாலை சோலையம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கிருபானந்தா குருக்கள் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (2-29)

# விசாகப் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை – வித்தகபுரம் திருவருள்மிகு சிவகுருநாத சுவாமி கோவில் விசாகப் பொங்கல் விழா எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

அடியார்கள் குறித்த நேரத்திற்கு முன்பாக தங்களது பொங்கல் நேர்த்திகளை நிறைவுசெய்து தருமாறு கேட்கப்படுகிறார்கள். (2)

# செபமாலை மாதா ஆலயத் திருவிழா

(கொழும்புத்துறை)

திருநகர் புனித செபமாலை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். நவநாள் வழிபாடுகள் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் இடம் பெறும்.

எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை நற்கருணை விழா இடம்பெறும். மறுநாள் புதன்கிழமை திருவிழாதிருப்பலி காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் என செபமாலை இளைஞர் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (2-51)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு அருள்மிகு கந்தசாமி ஆலய (முனி கோவில்) வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய உற்சவ காலத்தில் தினமும் மதியம் விசேட அபிஷேக பூஜைகள் நடைபெறும்.

மாலை வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (2)

## வற்றாப்பளை பொங்கல்




நந்திக் கடலோரம் வந்து
நயந்து குடியமர்ந்தாள்
கயல் துள்ளும்
கழனிகளின்
அயல் கோயில் கொண்டவளே
தென்னன் தமிழ் மதுரை
தீயிட்ட செற்றம் தணிந்தாள்
மற்றுமுன் மகிமை
அற்புதங்கள்
பக்தரை பக்கமாய்
இழுக்குதம்மா
வற்றாப்பளை வாழும்
கண்ணகியே
சிலம்பு கூறல் பாடி
இலம்பாடு தீர்ந்தான்
கவியொருவன்
வைகாசி விசாகப்
பௌர்ணமியில்
மடைப்பண்டம்
பரப்பிவைத்து
பொங்கலிட்டுக்
காவடிகள் எடுத்து
அடியார் நேர்த்திக்கடன்
கழிப்பார்
செந்தமிழர் வாழும்
வற்றாப்பளை தாயவளே
கண்பாராய் தமிழ்க்குடிகள்
மண்ணில் நல்ல வண்ணம்
வாழும் வகை அருள்வாய்

நாவற்குழி சு.சிவராசா

## நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய எட்டாம் திருவிழா இன்று

### நீராவிக் குளக்கரையான் திருநாள் எட்டு அசுவ வாகனத் திருக்காட்சி



கலியெனும் மாயவலை கட்டறுத்த
கரும்களிறு
நிர்மலமாய் வாழ்கின்ற இலங்கையரின்
குலக்களிறு
அன்னை பணி சிரம்தாங்கி
வாழ்ந்துவரும் மதகளிறு
கல்கியாய்த் திருக்காட்சி தருகின்றான்!
இன்று

*கஜவதனகுஹராஜனார்*

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அறிவின் பருவங்கள்



மனிதனாகப் பிறந்தும் தான் மனித இனம் என்று அறிந்து கொள்ள முடியாத பருவம் ஒன்று.

மனிதன் என்று அறிந்தும் மனிதனாக நடந்து கொள்ளத் தெரியாத பருவம் ஒன்று.

மனிதனாக வாழத் தெரிந்தும் அதுவரையில் அறியாமையால் கொண்ட பழக்கங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தெரியாததால் உணர்ச்சி, ஆராய்ச்சி என்ற இருவகைப் போட்டிகளுக்கிடையே வாழும் பருவம் ஒன்று.

அறிவும் செயல்களும் ஒன்றுபட்டு மனிதன் மனிதனாகவே வாழும் பருவம் ஒன்று.

தான் நெறியோடு வாழ்ந்தும் தெளிவற்றவர்களால் தனக்கும் சமுதாயத்திற்கும் விளையும் கேடுகளை நீக்கித் தன்னைப்போல் உலக மக்கள் அனைவரும் நெறியறிந்து வாழும் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்று முனைந்து செயலாற்றும் பருவம் ஒன்று.

ஆக, ஐவகைப் பருவங்களில் மக்கள் உலகில் வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு பருவத்திலும் பல நிலைகளில் உள்ளார்கள்.

இவ்வளவு பேதை நிலைகளில் வாழும் மக்கள் அனைவரின் கூட்டுறவின் இணைப்பாலே ஒவ்வொருவரும் தினசரி வாழ்வை நடத்தி வருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் இந்துவை வென்றது சுன்னாகம் ஸ்கந்தவரோதயா

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளில் 17 வயதுப் பிரிவு போட்டியொன்றில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பொடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 34.5 ஓவர் களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஞ்சயன் 22, ஸ்ரீகுமார் 15 ஓட்டங்களைப் பெற்றனா.

பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் டிலக்ஷன் 4 விக்கெட்டுக்களையும் டியோன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 119 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 31.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 88 ஓட்டங்களை மட்டுமே பெற்று போட்டியில் தோல்வியைத் தழுவியது. இதில் சுஜீவன் 20, சஜித் 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் கதியோன் 4 விக்கெட்டுக்களையும் மிதுஷன் மற்றும் ரஜிதரன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன்மூலம் இப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 30 ஓட்டங்களால் இப் போட்டியில் வெற்றியீட்டியது. (சு-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கொற்றாவத்தை சிவானந்தா சம்பியன்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் பத்தொன்பது வயதுக்குட்பட்ட வீரர்களுக்கான கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் திக்கம் இளைஞர் விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கொற்றாவத்தை சிவாணந்தா விளையாட்டுக்கழகமும் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகமும் மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தன்வசம் ஆக்கிக் கொண்டது. (சு)



தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் தெல்லிப்பழை கல்விக் கோட்ட முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி எஸ்.செல்வறஞ்சனா தலைமையில் இடம்பெற்றது. இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் யாழ்.பிராந்திய முன்னாள் முகாமையாளர் எஸ்.விக்கினராசா வெற்றி பெற்ற சிறார்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

# தெல்லிப்பழை மகாஜன வெற்றி

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணியினருக்கிடையில் நடத்தப்பட்டு வரும் துடுப்பாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 36 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

50 பந்துபரிமாற்றங்களைக் கொண்ட இந்தப் போட்டியின் ஆட்டம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றதுடன். இதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 46.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் எஸ்.சர்மிலன் 38. ஜே.டிலோஜன் 26. ரி.தேஜுஜன் 20. எம்.கமல்ராஜ் 17. ஜே.அனோஜன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்ததுடன். உதிரிகளாக 53 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணி சார்பாக எஸ்.கலைச்செல்வன் 03. வை.விதுசன் 02. எம்.ஜனுசன் 02 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 45.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 156 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில், எம்.கோபிராம் 40. ஆர்.அரவிந்தன் 26. வை.விதுசன் 22. கே.கிரித்தகணேஸ் 15. ஜே.சலுஜன் 12. ஓட்டங்களை பெற்றுக் கொடுத்ததுடன். உதிரிகளாக 31 ஓட்டங்கள் பெறப்பட்டன.

மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த எம்.பகீரதன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்கள் அடங்கலாக 16 ஓட்டங்களுக்கு 06 இலக்குகளையும். ஜே.அனோஜன் 02. எஸ்.சர்மிலன் 02 இலக்குகளையும் கைப்பற்றினர். (சு)

# ஸ்கந்தவரோதயா வெற்றி

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை அணிகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

இதில் 15 வயதுப் பிரிவு அணிக்கான போட்டியொன்றில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இப் போட்டியின் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியும் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 42.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழ ந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் தர்மிலன் 28 ஓட்டங்களையும் தனுஜன் 25 ஓட்டங்களையும் விதுஷன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் தனுஷன் 3 விக்கெட்டுக்களையும் செந்தூரன் மற்றும் யசூரன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 169 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 32.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 153 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதில் உதய்ராகவன் 20 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி சார்பில் ஜீவிதன் 4 விக்கெட்டுக்களையும் தர்மிலன், தனுஜன் மற்றும் விதுஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன்மூலம் இப்போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 15 ஓட்டங்களால் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை வென்றது. (சு-23)

# மட்டுவில் வளர்மதி வெற்றி

நுணாவில் விளையாட்டுக் கழகத்துக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான அணிக்கு 9 பேர் பங்குபற்றும் 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இதில் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நுணாவில் பாரதி விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 11.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 107 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் சார்பாக அஜந்தன் 42. சசி 18 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.,

பந்துவீச்சில் நுணாவில் பாரதி விளையாட்டுக் கழகம் சார்பாக லஜனன் 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும். சுஜீவன் 46 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 108 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய நுணாவில் பாரதி விளையாட்டுக் கழக அணியினர் 11 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களை பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் நுணாவில் பாரதி விளையாட்டுக் கழகம் சார்பாக மிதுலன் 21. லகி 17 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் சார்பாக அமல் 26 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும். கேதீஸ் 11 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும். பானு 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (சு-23.29)








வடமாகாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் இரண்டாமிடத்தினைப் பெற்ற பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் கபடி அணி வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை பாடசாலையில் இடம்பெற்ற போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்புள்ளை பிரச்சினைகள் பிரதமர் தலைமையில் ஆராய்வு

(கொழும்பு)

தம்புள்ளை கோயில் மற்றும் பள்ளிவாசலை பொருத்தமான இடத்தில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ன உறுதியளித்தார்.

கம்பளை தொழுவையில் அமைந்துள்ள பிரதமரின் இல்லத்தில் முஸ்லிம் தூதுக்குழுவொன்று பிரதமரை டி.எம்.ஜயரட்னவை நேற்றுக் காலை சந்தித்து தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பாக கலந்துரையாடிய போது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சுகாதார வைத்திய பணிப்பாளர் என்.எம்.எம். இக்பாலின் ஏற்பாட்டின் பேரில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தலைவர் கே.என். தீன், பேரவையின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஸ்மா ஆப்தீன், முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம்.அமீன், மடவளை வை.எம்.எம்.ஏ தலைவர் எம்.எச்.எம். றிஸ்மி ஆகியோரை உள்ளடக்கிய இத்தூதுக்குழுவினர் பிரதமரிடம் தம்புள்ளை பள்ளிவாசல் தொடர்பான தற்போதைய நிலைவரங்களை எடுத்துக்கூறினர்.

தம்புள்ளை பள்ளிவாசலை மட்டுமன்றி கோயிலையும் பொருத்தமானதும் மக்கள் விரும்பக்கூடியதுமான இடத்தில் அமைக்க வேண்டும். எனவே இவற்றை அமைப்பதற்கான காணிகள் தொடர்பாக ஆராயுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுப்பதாகவும் பிரதமர் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தார்.

நாட்டில் சகல இனத்தவர்களினதும் சமய ரீதியான உரிமையை உறுதிப்படுத்துவது அவசியம் என்ற அடிப்படையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. ஜனாதிபதியும் தம்புள்ளை பள்ளிவாசல் விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைப்பதாகவும் பிரதமர் தொடர்ந்தும் குறிப்பிட்டார். (எ-6)

## சந்தேகநபரைத் தேடி பொலிஸார் வலைவீச்சு


(கொழும்பு)

யுத்த காலத்தில் விடுதலை புலிகளால் புதைக்கப்பட்ட குண்டுகளை தோண்டி எடுத்து அதனுள் உள்ள டி.என்.டி ரக வெடிபொருட்களை மீனவர்கள் மற்றும் ஏனைய நபர்களுக்கு விற்றதாக சந்தேகிக்கப்படும் நபரொருவரை கைது செய்வதற்கு பொலிஸார், பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

தமிழீழ விடுதலை புலி உறுப்பினர் என கூறப்படும் சிறில் நிலங்க ஜீ அன்ரனி (வயது 28) என்பவர் தொடர்பிலேயே பொலிஸார் தகவல் கோரியுள்ளனர்.

மன்னார் மடு பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே மேற்படி நபரை கைது செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இச்சந்தேக நபர் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் 0112451636 மற்றும் 0112451634 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-6)



பிரெஞ் ஓபன் டெனிஸ் தொடரில் நேற்று நடந்த ஆடவர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம்வென்ற ஸ்பெயினின் ரபேல் நடாலை படத்தில் காணலாம்.

## போர்குற்ற...

வும் பணியாற்றியுள்ள டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையார், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைக் களைவதற்கான குழுவிலும் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐ.நா. விசாரணைக் குழுவின் தலைவராக டேம் சில்வியா க்ார்ட்ரைட் அம்மையாரை ஐ.நா. அடுத்த வாரம் அதிகார பூர்வமாக நியமிக்கவுள்ளது. இலங்கை மீதான இந்த விசாரணைகளுக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், இலங்கை மீதான விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐ.நா. விசாரணைக் குழு அதிகாரபூர்வமாக நியமிககப்பட்டதும், இலங்கையில் விசாரணைகளை மேற்கொள் வதற்காக அங்கு விஜயம் செய்வதற்கான நுழைவு அனுமதி கோரி விண்ணப்பிக்கப்படவுள்ளதாக ஐ.நாவின் முன்னாள் அதிகாரி குறிப்பிட்டதாக இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கை மதான விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐ.நா. விசாரணைக் குழுவின் இணைப் பாளராக மனிதவுரிமைகள் தொடர்பிலான நிபுணர் சன்ட்ரா பெய்டாஸ் அம்மையார் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், இச் செயதி வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஐ.நாவின் புதிய மனிதவுரிமைகள் ஆணையாளராக ஜோர்தான் இளவரசர் சையிட் அல் ஹுசைனை நியமிக்கவுள்ளதாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் கூறியிருந்தமையும் தெரிந்ததே. (எ-6)

## ஜோர்தான்...

க்கு மிகவும் நெருக்கடியாக இக்காலகட்டத்தில் இவரின் நியமனம் இடம்பெற்றிருக்கக் கூடாது என தகவலறிந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளதாக இவ்வூடகம் தெரிவித்துள்ளது.

மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் ஐ.நாவின் புதிய மனிதவுரிமைகள் ஆணையாளர் இளவரசர் சையிட் அல் ஹுசைன் இலங்கையுடன் கடும்போக்கைக் கடைப்பிடிப்பாரா என்று எழுப்பிய கேள்விக்கு, அது குறித்து தாம் கவலை கொண்டுள்ளதாக இலங்கை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் புதிய மனித உரிமைகள் ஆணையாளராக இளவரசர் சைட் அல் ஹுசைனை பான் கீ மூன் தெரிவு செய்திருந்தாலும் அதற்கான அங்கீகாரத்தை ஐ.நா. பொதுச் சபையில் பெறவேண்டும் என்ற போதிலும் மேற்கத்தேய நாடுகளின் ஆதரவு கிடைப்பது உறுதி என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், அரசாங்கம் தனது மூலோபாயத்தை மீளாய்வு செய்து கொள்ள வேண்டும் என்றும், ஐ.நா விசாரணைகளுக்கு ஒத்துழைக்க மறுப்பது தேசிய நலனுக்கு எதிராக அமைந்துவிடும் என்றும் இலங்கையின் முன்னாள் இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார் என இவ்வூடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (எ-6)

## தமிழக மீனவர்கள்...

தீர்க்க, நிரந்தர தீர்வுகாண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் ஜெயலலிதா.

இதேவேளை இலங்கைக் கடற்படை தொடர்ந்து தமிழக மீனவர்களைக் கைது செய்து வருவதைத் தொடர்ந்து அதற்கு கண்டனம் தெரிவித்து ராமேஸ்வரத்தில் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் 131 தமிழக மீனவர்களை இலங்கைப் படை பிடித்துள்ளது. இதில் ஒரு பகுதியினரை மட்டுமே அது விடுவித்துள்ளது. இலங்கைக் கடற்படையின் இந்த அட்டகாசத்தால், ராமேஸ்வரம் மீனவர்கள் கடும் கோபமடைந்துள்ளனர். ராஜபக்ஷ தனது சுயரூபத்தை மீண்டும் காட்டத் தொடங்கியுள்ளதாக கோபம் எழுந்துள்ளது.

இந்த நிலையில், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 83 மீனவர்களை விடுவிக்க கோரிக்கை விடுத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். மேலும் மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 22 படகுகளை மீட்டுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் மீன் பிடித்ததான குற்றச்சாட்டில் 83 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளில் இவர்கள் சனிக்கிழமை இரவும், ஞாயிறு அதிகாலையும் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையினரும், மீன்வளத்துறையினரும் கூறுகின்றனர். இவர்களது படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்து வருவதாகவும், அதனால் தமது வாழ்வாதாரங்கள் பெருமளவு பாதிக்கப்படுவதாகவும் இலங்கை மீனவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். (எ-6)

## இராணுவ வன்முறை...

ங்களிலும் படைத்தரப்பினர் சுமார் 18 சதவீதமான குற்றச்செயல்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

30 ஆண்டுகாலப் போரை முடிவுக்கு கொண்டு வந்த ஒரு நாட்டின் படைத்தரப்பினருக்கு சரியான உளவளத்துணை வழங்கப்பட வேண்டும் என கொழும்பு மற்றும் கன்பரா பல்கலைக்கழக உளவியல் விரிவுரையாளர் கலாநிதி பிரபாத் குணதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கை படைத்தரப்பினருக்கான உளவளத்துணை சிறப்புத் தேர்ச்சி பெற்ற உளவளத்துணையாளர் மூலம் வழங்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிடுகின்றார்.

மாறாக போரின் போது ஒரேமாதிரியான மனவடுக்களைச் சந்தித்த படைத்தரப்பின் மூத்த அதிகாரிகள் தமக்குக் கீழே செயற்படும் படையினருக்கு உளவளத்துணை வழங்குவது பாதகமான விளைவையே ஏற்படுத்தும் எனவும் கலாநிதி பிரபாத் குணதிலக சுட்டிக் காட்டியுள்ளார்.

படையினருக்கு போதிய உளவளத் துணை வழங்கப்படாததாலேயே, அவர்கள் படைத்துறையில் இருந்து தப்பிச்சென்று பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவதாக உளவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், போரின் போது பெருமளவான மக்களைக் கொன்ற படையினர் பாராட்டப்படுவதாலேயே, அவர்கள் தற்போது சட்டத்துக்குப் புறம்பாக பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கு காரணம் என கலாநிதி பிரபாத் குணதிலக தெரிவித்தார்.

அதேவேளை, படைத்தரப்பினர் எவரும் இத்தகைய உளவியல் தாக்கத்திற்கு உட்படவில்லை எனவும், படைத்தரப்பின் மூத்த அதிகாரிகளால் வழங்கப்பட்ட உளவளத்துணை ஆலோசனை பயனுள்ளதாக அமைந்துள்ளதாகவும் பிரிகேடியர் றுவான் வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும், படைத்துறையில் தான் சேவையாற்றிய போது வழங்கப்பட்ட உளவள ஆலோசனைகள் தனக்குப் பயனளிக்கவில்லை என படைத்தரப்பில் பத்து ஆண்டுகள் சேவையாற்றிவிட்டு, 2012 ஆம் ஆண்டில் வெளியேறிய முன்னாள் படைச் சிப்பாயான சரத் அபயக்கோன் தெரிவித்தார் என இக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## வடக்குக் கிழக்கு பகு...

பட்டுள்ளதாக சுகாதார துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மலையகத்தில், குறிப்பாக நுவரெலியா மாவட்டத்திலும் வடக்கில் முன்னாள் போர் வலயப் பிரதேசமான கிளிநொச்சியிலும் சிறார்களிடத்தில் போஷாக்கின்மையும் இரத்தச்சோகையும் அதிகளவில் காணப்படுவதாக சுகாதார அமைச்சைச் சேர்ந்த சமுதாய மருத்துவ நிபுணர் டாக்டர் முரளி வல்லிபுரநாதன் பி.பி.சியிடம் கூறினார்.

அண்மைய ஆய்வுத் தரவுகளின்படி, இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட சிறார்களில் 25 வீதமானோர் நிறை குறைந்த தன்மையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த நிலைமை 40 வீதத்துக்கும் அதிகமாக காணப்படுவதாக மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தெரிவிததார்.

அதேபோல, நுவரெலியா மாவட்டத்தில் சிறார்கள் நால்வரில் ஒருவர் வளர்ச்சி குன்றிய நிலையில் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

கர்ப்பிணித் தாய்மார் மரணம் தொடர்ச்சியாக நுவரெலியா மாவட்டத்திலேயே அதிகரித்த நிலையில் காணப்படுவதாகவும் மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

முன்னாள் போர் வலயங்களிலும் மலையகத் தோட்டப்புறங்களிலும் காணப்படும் வறுமை நிலையே அங்கு ஊட்டச்சத்துக் குறைபாடும் இரத்தச் சோகையும் அதிகரித்திருப்பதற்கு காரணம் என்றும் அவர் கூறினார். (எ-6)

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ. நடராஜ ஐயர் கணேசராஜக் குருக்கள்

(பிரதம குரு, யாழ் / அத்தியடி பிள்ளையார் கோவில்)

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ நடராஜ ஐயர் கணேசராஜக் குருக்கள் 08.06.2014 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் நித்தியானந்தினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடராஜ ஐயர் ருக்மணி அம்மா ஆகியோரின் அன்பு மகனும், யோகீஸ்வரக்குருக்கள் சுபதாம்பிகை அம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், பாலசுப்பிரமணியக் குருக்கள், சதாசிவ ஐயர், தாமோதர ஐயர், நாகேஸ்வரி, அகிலேஸ்வரக் குருக்கள், ஸ்ரீதரக்குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கேதீஸ்வர சர்மா, ஞானேஸ்வரக் குருக்கள், சயாதேவி, காலஞ்சென்ற பிரபாகரக் குருக்கள் மற்றும் ரஞ்சிதக் குருக்கள் ஜெகதீஸ்வர சர்மா, காலஞ்சென்ற கிருஷ்ணராஜ சர்மா மற்றும் சுபாஸ்கரக் குருக்கள் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2014) பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
021 222 9450

தகவல் :-
க.நித்தியானந்தினி (மனைவி)
மற்றும் குடும்பத்தினர்.

(6708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற...

தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்தின் இரண்டு நீதிபதிகளில் ஒருவராக டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையார் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான ஐ.நா விசாரணைக் குழுவின் விசாரணைகள் அடுத்த மாதம் டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையாரின் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது என ஐ.நாவின் முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தின் முதல் பெண் மாவட்ட நீதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையார், நீதிபதியாக இருந்த காலப்பகுதியில் மிகச் சிறப்பாக செயலாற்றியமைக்காக பல கௌரவ விருதுகளையும் பெற்றுள்ளார்.

அத்துடன், 2001ஆம் ஆண்டு முதல் 2006-ம ஆண்டு வரை நியூசிலாந்தின் ஆளுநராக

19 ஆம் பக்கம் பார்க்க....


**மிக குறைந்த விமான கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | –16500 | RTN |
| கொழும்பு – சென்னை | –21900 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – பெங்களூர் | – 27600 | RTN |
| கொழும்பு – மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –30200 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு – லண்டன் | –44800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – கனடா | –105700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

**Nation Popular Travels & Tours**

#128, Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
**0214 920 920**
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம் (C-7608)

**YOGIS**

(Academy & Beauty Therapy, Hair Dressing & Home Science)

யாழ். பெற்றா எசன்ஸ் ஆதரவுடன்

**EXHIBITION**

CAKES and SUGAR CRAFT 11.06.2014

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களால் காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கேக் கண்காட்சி



திருமண அலங்கார கேக் வகைகள், பிறந்தநாள் கேக் வகைகள், ஐசிங் பூக்களின் அலங்காரங்கள் இன்னும் வித்தியாசமான கேக்களின் அலங்கார கண்காட்சி (3 நாட்கள் மட்டும்) 11.06.2014 முதல் ஆரம்பமாகிறது. கண்காட்சி 11ம் திகதி 11 மணிக்கும் 12ம், 13ம் திகதிகளில் காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை நடைபெறும்.

நடைபெறும் இடம் :- 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக) (C-7600)

**திறமையின் தேடல்! VACANCIES**

எமது சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து தொழில் புரிய ஓர் அரியவாய்ப்பு.

அனுபவம் அவசியமற்றது. வயது:- 18-30. தகைமை O/L இருந்து பயிற்சியின் போது 16000/= பயிற்சியின் பின் 55000/= மேல் ......

**0774458134 அழைத்து நேர்முகத் தேர்விற்கு முன்பதிவு செய்யுங்கள்.** (6707)

Address:-No.225, 3rd Cross Street Hospital Road, Jaffna.


# தொண்டு...

ந்து செயற்பட்டு வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தொடர்பில் கண்காணிக்க வேண்டுமென கோரியுள்ளார். வெளிநாட்டு பங்குதாரர்களுடன் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் ஒப்பந்தங்கள் நாட்டுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அமைச்சர் வாசுதேவ நாணயக்கார பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஆதரவளித்து வரும் நிலையில், அமைச்சர் விடுத்துள்ள கோரிக்கை தன்னார்வ தொண்டு நிறுவன வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறெனினும், அமைச்சரின் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தொடர்பில் ஓரளவு நெகிழ்வுப் போக்கை பின்பற்றவேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-6)


**220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

**திருமுருகன் கொம் நெற்**

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION — MMBL Money Master




- அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்
- கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை
- அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
- 3 – 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.

இல. 271A. கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் சிலோனிற்கு முன்பாக)
தொ.பே.: 021 222 7835

கிளைகள்:

7 நாட்களும் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் (6607)

**Obtain a world class UK Qualification**

**HND IN CIVIL ENGINEERING**

PEARSON edexcel — advancing learning, changing lives



**DURATION : 2 YEARS**

**புதிய பிரிவு ஆரம்பம்: 14/06/2014**

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900
071 7775 333

**IIS CITY CAMPUS**
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk
E-Mail :info@iis.edu.lk (C-7604)

**MA, Mcom, Msc, MBA, PGDIP**

**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)**

மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான (MAY 2015) பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

**பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றது.**

MAல் பொருளியல், வரலாறு, அரசியல், தமிழ், ஆங்கிலம், சமூகவியல், பொதுநிர்வாகம், சமயமும் தத்துவமும் JOURNALISM, MASS COMMUNICATION, ENGLISH & LINGUISTIC, SOCIAL WORK, TOURISM MANAGEMENT, HUMAN RIGHTS, WOMAN STUDIES ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.

Mcomல் COMMERCE, FINANCE, BANKING, MARKETING, CO-OP MANAGEMENT ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.

Mscல் MATHS, PHYCHOLOGY, ELECTORNIC & COMMUNICATION, COMPUTER SCIENCE, HOTEL MANAGEMENT, TOURISM & HOTEL MANAGEMENT ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.

MBAல் FINANCIAL, MARKETING, HUMAN RESOURCE, INTERNATIONAL BUSINESS MARKETING, OPERATIONS AND PROJECT SYSTEMS, HOSPITAL TOURISM, HOSPITALY MANAGEMENT, RETAIL MANAGEMENT ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.

PGDIPல் ஒருவருட கற்கை நெறியாக பின்வரும் பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.
COMPUTER APPLICATION, JOURNALISM MASS COMMUNICATION, HOTEL MANAGEMENT, ACTUARIAL MANAGEMENT, INDUSTIAL COMPANY LAW, INFORMATION & COMMUNICATION LAW, MANAGEMENT MARKETING, RETAIL MANAGEMENT, WOMEN STUDIES, ENGLISH LANGUAGE, GUIDANCE & COUNSELING SYSTEMS MANAGEMENT, HUMAN RESOURCE MANAGEMENT, INTERNATIONAL BUSINESS MARKETING, PSYCHOLOGICAL COUNSELLING, FINANCIAL MANAGEMENT, HUMAN RIGHT

**மேற்குறிப்பிட்ட பட்டநெறிகளில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.**

- இப்பட்டநெறிகள் யாவும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- **பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய உயர் கல்லூரி பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.**

(C-7598)

யாழ். இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம்
021 222 8148

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவ்னம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101 (C-7599)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.